Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 21 சனிக்கிழமை (03-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:129

### யாழ். தேர்தல் மாவட்டத்தில்

# தமிழரசுக் கட்சிக்கு 8 ஆசனங்கள்!

## 9 ஆவது இடம் யாருக்கு என்று நிர்ணயிக்க தொடர்ந்து வாக்குகள் எண்ணப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஏப்ரல்3

**இன்று காலை மேணிவரை கிடைத்த உத்தியோகபூர்வமற்ற முடிவுகளின் பிரகாரம் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தமிழரசுக்கட்சிக்கு (தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு) எட்டு நாடாளுமன்ற ஆசனங்கள் கிடைப்பது உறுதியாகியது. ஒன்பதாவது ஆசனம் தமிழரசுக் கட்சிக்கா அல்லது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கா என்பதனைத் தீர்மானிப்பதற்காகத் தொடர்ந்து வாக்குகள் எண்ணப்பட்டுக்கொண்டிருக்கின்றன.**

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கான தேர்தல் முடிவுகள் இச்செய்தி அச்சாகும் வரை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை.

முதற்கொண்டு எண்ணப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையின் பிரகாரம் தமிழரசுக் கட்சிக்கு ஏழு ஆசனங்களும் ஒரு போனஸ் ஆசனமுமாக மொத்தம் எட்டு ஆசனங்கள் கிடைக்கும் என்பது உத்தியோகபூர்வமற்ற முறையில் அறியப்பட்டது.

மிகுதியான ஒன்பதாவது ஆசனம் தமிழரசுக் கட்சிக்கா அல்லது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கா (ஈ.பி.டி.பி) என்பதனை நிர்ணயிப்பதற்காகத் தொடர்ந்து வாக்குகள் எண்ணப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

யாழ்.மாவட்ட வாக்குகளை எண்ணும் பணி நேற்றிரவு 9.30 மணியளவில் ஆரம்பமானது. முதலில் தபால்மூல வாக்குகள் எண்ணப்பட்டன. அதில் தமிழரசுக்கட்சியே அதிக வாக்குகளைப் பெற்றது. தொடர்ந்து தொகுதிரீதியான வாக்குகள் எண்ணும் பணிகள் ஆரம்பித்தன. ஆரம்பம்முதலே தமிழரசுக் கட்சியின் கை ஓங்கியிருந்தது. அனைத்துத் தொகுதிகளிலும் பெருமளவு வாக்குகள் வித்தியாசத்தில் கூட்டமைப்பு முன்னணி வகித்தது. இரண்டாவது இடத்தை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி பிடித்தது. எனினும், ஒவ்வொரு தொகுதியிலும் ஒருசில ஆயிரம் வாக்குகளை அது மட்டுமே பெற்றிருந்தது. மூன்றாவது இடத்திலிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேச்சைக்குழு - ஒன்று ஒவ்வொரு தொகுதியிலும் சிலநூறு வாக்குகளை மட்டுமே பெற்றது.

காலை 6 மணிவரையும் எண்ணிமுடிக்கப்பட்ட 7 தொகுதிகளின் முடிவுகளின் பிரகாரமும் ஏனைய வாக்குகளின்படியும் யாழ்.மாவட்டத்தில் அனைத்து ஆசனங்களும் தமிழ்க்கூட்டமைப்புக்கே கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஏனைய தொகுதி முடிவுகளும் புத்தளத்தில் இருந்து வரவேண்டிய முடிவுகளும் முழுமையாகக் கிடைக்கவில்லை. அவையும் கிடைக்கும்போது சிலவேளைகளில் ஈ.பி.டி.பி. கட்சிக்கு ஓர் ஆசனம் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. வாக்குகள் எண்ணும் பணிகள் இச்செய்தி எழுதப்படும்வரை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

(அ-ம-3-5)

# வன்னிப்பகுதி மக்கள் அலையெனத் திரண்டு வந்து முகமாலையிலும் ஓமந்தையிலும் வாக்களித்தனர்

## கொளுத்தும் வெயிலில் பிள்ளைகுட்டிகளுடன் கால்கடுக்க நடந்தும் வந்தனர்

முகமாலை,ஏப்.3

நேற்று நடைபெற்ற தேர்தலில் வடக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் மிகுந்த ஆர்வத்துடனும், சுறுசுறுப்பாகவும் வாக்களிப்பில் பங்கு பற்றியிருக்கின்றனர்.

வடக்கில் முகமாலை இராணுவச் சோதனை நிலையப் பகுதியிலும்; ஓமந்தை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் வன்னிப் பிரதேச வாக்காளர்கள் நேற்று வாக்களித்தனர்.

கிளிநொச்சி மாவட்டம் மற்றும் மருதங்கேணி பிரதேச வாக்காளர்களுக்காக முகமாலையில் படையினரின் காவலரண பகுதியில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் மிக அமைதியான முறையில் வாக்களித்தனர்.

கிளிநொச்சி, மருதங்கேணிப் பகுதிகளில் இருந்து பளைப் பகுதிக்கு வந்திருந்த ஆயிரக்கணக்கானவர்கள் நேற்றுக்காலை 6.30 மணிக்கு சோதனை நிலையம் திறக்கப்பட்டதும் அலை அலையாக உள்ளே வரத் தொடங்கினர்.

விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலையில் இருந்து படையினரின் முன்னரங்க நிலைவரையான 300 மீற்றர் வரையான சூனியப் பிரதேசத்தை கால் நடையாகவே வாக்காளர்கள் கடந்தனர்.

படையினரின் காவலரண் பகுதியில் ஆண்களுக்கு நான்கு நுழைவாயில்களும் பெண்களுக்கு நான்கு நுழைவாயில்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

அந்த நுழைவாயில்களில் நின்ற பொலீஸார் 'மெற்றல்டிற்றேற்றர்கள்' மூலம் வாக்காளர்களைச் சோதனை செய்து அனுமதித்தனர்.

அங்கிருந்து ஒருபக்கத்தால் அலை போல வந்த மக்களைக் கிராம அலுவலர்கள் அந்தந்த வாக்களிப்பு நிலையங்களுக்குள் அனுமதித்தனர். வாக்களித்த பின்னர் அவர்கள் வேறுவழியால் திரும்ப அனுமதிக்கப்பட்டனர்.

தெற்கில் இருந்துவரும் வாகனங்களில் இருந்து பொருள்களை இறக்கிச் சோதனையிடும் பகுதியில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

படையினர் தமது காவலரண்களைத் தமது முந்திய இடத்தில் இருந்து சுமார் 400 மீற்றர் வரை பின்

(14ஆம் பக்கம் பார்க்க)

### பொதுத் தேர்தல் விசேட பதிப்பு

நேற்று நடைபெற்ற 13ஆவது பொதுத் தேர்தலின் பூரண விவரங்களுடன் இன்று மாலை உதயனின் விசேட பதிப்பு வெளிவருகிறது. காத்திருங்கள்!



சமாதானத்தை வலியுறுத்தி கிளிநொச்சிப் பகுதியில் இருந்து வாக்களிப்பதற்காக நேற்று முகமாலைக்கு வந்த மூத்த தமிழ் பிரஜைகள் இவர்கள். தமது வாக்குரிமையைச் செலுத்தவேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வத்துடன் வாக்களிப்பில் கலந்துகொண்டனர். *(படம் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தீவுப் பகுதியிலும் அமைதியான வாக்களிப்பு அசம்பாவித சம்பவங்கள் எதுவுமில்லை!

மண்டைதீவு,ஏப்.3

கடந்த பொதுத் தேர்தலின்போது பெரும் வன்முறைக்களமாக மாறி இருந்த தீவுப் பகுதியில் இம்முறை அமைதியான வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது.

குறிப்பிடக்கூடிய பெரிய அசம்பாவித சம்பவம் எதுவும் தீவுகளில் இடம்பெற்றதாக அறிவிக்கப்படவில்லை.

தவுப் பகுதியின் முன்னரங்க கிராமங்களான வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவுக் கிராமங்களில் அமைதியான முறையில் வாக்களிப்பு இடம்பெற்றிருக்கிறது.

அல்லைப்பிட்டி, மண்கும்பான் வேலணைக் கிராமங்களிலும் இந்த முறை வழமைக்கும் கூடுதலான வாக்காளர்கள் வாக்களித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதிகளில் இரு பிரதான கட்சிகளைச் சேர்ந்த ஆதரவாளர்களை வாக்களிப்பு நிலையங்களுககு அருகில் காணமுடிந்தது.

துறையூர்ப் பகுதி வாக்காளர்களுக்கான வாக்களிப்பு நிலையமான வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் அமைந்திருந்த வாக்களிப்பு நிலையத்தில் குறைந்தளவிலேயே வாக்குகள் பதிவு செய்யப்பட்டதாக அந்தப் பகுதிக் கிராம சேவையாளர் தெரிவித்தார்.

மண்கும்பான் பாடசாலையில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் கடமையில் இருந்த வாக்களிப்பு முகவர் ஒருவர் இளைஞர் ஒருவரிடம் அடையாள அட்டையைச் சமர்ப்பிக்குமாறு கேட்டபொழுது முறுகல் நிலை ஏற்பட்டதாகவும் -

இதில் தலையிட்ட தலைமை வகிக்கும் அலுவலர் அடையாள அட்டை தேவை இல்லை எனக் கூறி நிலைமையை அமைதிப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

மண்டைதீவுக் கிராமப் பகுதியில் இடப்பெயர்வின் பின் முதல்முறையாக எதிர்பாராத அளவில் அதிகளவான வாக்குகள் பதிவு செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக் காலத்தில் ஓரளவு கணிசமான அளவில் மக்கள் குடியமர்ந்துள்ளனர். அத்துடன், யாழ். நகரப் பகுதியை அண்டியுள்ள பகுதிகளில் குடியமர்ந்துள்ள மண்டைதீவுக் கிராமப் பகுதியைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் தமது வாக்குகளைப் பதிவு செய்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

உயர் பாதுகாப்பு வலயமான மண்டைதீவுக் கிராமத்துக்கு அயல் கிராமப் பகுதிகளில் இருந்து வாக்களிக்கச் சென்றவர்களுக்கு அப்பகுதிக் கடற்படை தாராளமாக ஒத்துழைப்பு வழங்கியதாக வாக்காளர்கள் தெரிவித்தனர்.

வழமையான பதிவுகளோ, 'பாஸ்' நடைமுறைகளோ நடைமுறைப்படுத்தப் படவில்லை. பண்ணைச் சந்தியிலும் அதற்கு சற்றுத் தள்ளி ஒருசில பத்து மீற்றர்களில் அமைந்துள்ள தடைகளும் அகலத் திறந்துவிடப்பட்டிருந்தன.

பஸ் மற்றும் தனியார் வாகனங்களில் சென்றவர்கள் எவரும் இறக்கிச் சோதனை இடப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மண்டைதீவில் இரண்டு வாக்களிப்பு நிலையங்கள் இருந்தபோதும் இலக்கம் 29 வாக்களிப்பு நிலையத்திலேயே பெரும்ளவானவர்கள் வரிசையில் நின்று வாக்களித்தனர்.

புங்குடுதீவுப் பகுதியில் மாணவர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டனர் என்று வானொலிச் செய்திகள் தெரிவித்தன.

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை பகுதிகளிலும் வாக்களிப்பு இடம்பெற்றது.

இதேவேளை -

புங்குடுதீவில் அமைந்திருந்த வாக்களிப்பு நிலையத்தில் வாக்கு மோசடியில் ஈடுபட முயன்றனர் என்று கூறப்படும் 6 பேர் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது. அவர்கள் அறுவரும் ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## கண்டியில் வாக்களிப்பில் அனுருத்த ரத்வத்த

கண்டி,ஏப்.3

கண்டி மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற பொதுத்தேர்தலில் எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை. 12 உறுப்பினர்களைத் தெரிவதற்கு 13 தேர்தல் தொகுதிகளிலும வாக்களிப்பு சுறுசுறுப்பாக இடம்பெற்றது.

முன்னாள் அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் பலத்த பொலீஸ் காவலுடன் கண்டி வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களித்தார்.

(ஐ-க)

## முகமாலையில் வாக்காளருக்கு ஈ.பி.டி.பி. துண்டுப்பிரசுரம்

### கண்காணிப்பாளர்களிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.3

கிளிநொச்சி மற்றும் மருதங்கேணிப் பகுதியில் இருந்து வாக்களிப்பதற்காக முகமாலைக்கு வந்த மக்களுக்கு ஈ.பி.டி.பியினர் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர். இதுகுறித்து தேர்தல் கண்காணிப்பாளர்களிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாக்களிப்பதற்காக வந்த வாக்காளர்களுக்கு, முகமாலையில் படையினரின் முன்னரங்க நிலைக்கு அருகில் நின்ற ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் தமது துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர். பலர் துண்டுப்பிரசுரங்களை வாங்க மறுத்தனர். சிலர் வாங்கிய பிரசுரங்களை வீசிவிட்டுச் சென்றனர்.

அங்கு பணியில் இருந்த யாழ். உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் குலவர்த்தனவிடம் கேட்டபோது, துண்டுப் பிரசுரங்களை வாக்களிப்பு நிலையங்களில் இருந்து கால் கிலோ மீற்றருக்கு அப்பால் வைத்து விநியோகிக்க முடியும். இதன் காரணமாக அனுமதித்தோம் என்று பதில் அளித்தார்.

ஆயினும், அங்கு வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் மாவை சேனாதிராசா இது குறித்துத் தேர்தல் கண்காணிப்பாளர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்து முறைப்பாடு செய்தார்.

இந்த விடயத்தைத் தாம் கவனத்தில் எடுத்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

அத்தோடு -

முகமாலையில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களில் பணிபுரியும் ஈ.பி.டி.பியின் தேர்தல் முகவர்கள் வேண்டுமென்றே தமக்கு ஒதுக்கப்பட்ட பணிகளைத் தாமதப்படுத்துவதாக கூட்டமைப்பு வேட்பாளர்களான மாவை சேனாதிராசாவும், சூ.சிறிலும் தேர்தல் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டனர்.

(ஐ-3)




கைதடிச் சந்திப் பகுதியில் உள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றில் வாக்காளர் வரிசையில் நின்று வாக்களிப்பதைப் படத்தில் காணலாம். *(படம் : அலுவலகப் படப்பிடிப்பாளர்,- மேலும் படங்கள் 11ஆம் பக்கத்தில்)*

## மட்டு. தமிழ்ப் பகுதிகளில் வாக்களிப்பு மந்தம்

மட்டக்களப்பு,ஏப்.3

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்ப் பகுதிகளில் வாக்களிப்பு மந்தமாக இருந்தது. முஸ்லிம் பகுதிகளில் 98 சதவீதமான வாக்குகள் பதிவு செய்யப்பட்டன.

தமிழ்ப் பகுதிகளான மட்டக்களப்பில் 40 சதவீதமும் கல்குடாவில் 72 சதவீதமும் பட்டிருப்பில் 64 சதவீதமும் வாக்குப்பதிவு இடம்பெற்றிருப்பதாக தெரிவத்தாட்சி அதிகாரி தெரிவித்தார்.

அதேசமயம், முஸ்லிம் பகுதிகளான காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய பகுதிகளில் 98 சதவீத வாக்களிப்பு இருந்தது.

மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியைச் சேர்ந்த வாக்காளர்களில் 50 சதவீதமானவர்கள் வாக்களித்துள்ளனர் என்று தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவித்தார்.

(ஐ-3-21)

## யாழ். மாவட்டத்தில் 45 சதவீத வாக்குப்பதிவு

யாழ்ப்பாணம்,ஏப்.3

கிளிநொச்சி மாவட்டத்தையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் நேற்று வாக்களிப்பு மிகவும் அமைதியான முறையில் நடைபெற்று முடிந்திருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் 45.97 சதவீத வாக்குகள் பதிவுசெய்யப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. கிளிநொச்சி, மருதங்கேணி பகுதிகளைச் சேர்ந்த வாக்காளர்களில் 52 வீதம் பேர் வாக்களித்துள்ளனர்.

வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் ஆகிய பிரதேசங்களில் வாக்களிப்பு மிகவும் சுமூகமான முறையில் நடைபெற்றது என்று பிரதேசச் செய்தியாளர்கள் அறிவித்திருக்கின்றனர்.

அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களிடையே சிறுசிறு முறுகல் சம்பவங்கள் ஆங்காங்கே ஏற்பட்டதைத் தவிர தேர்தல் மிகவும் அமைதியாக நடைபெற்றதாக யாழ். பிரதேச தேர்தல் அதிகாரிகள் குறிப்பிட்டிருக்கின்றனர். நேற்றுக் காலையில் வாக்களிப்புச் சற்று மந்தமாகக் காணப்பட்டது. பின்னர் நண்பகல் வாக்கில் வாக்காளர்கள் சுறுசுறுப்பாக வாக்களிப்பில் கலந்துகொண்டதைக் காண முடிந்தது.

வாக்குச்சாவடிகளுக்கு வெளியே கூட்டமாகக் காணப்பட்டவர்களை பொலீஸார் அவ்விடங்களிலிருந்து அகற்றினர். சில இடங்களில் கட்சி ஆதரவாளர்கள் சிலர் பொலீஸாரால் தடுத்துவைக்கப்பட்டனர்.

வலிகாமம் பகுதியில் காலையில் வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்காக வருகைதந்தோரின் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவில் காணப்பட்டது. மந்தகதியில் வாக்களிப்புகள் ஆரம்பிக்கப்பட்டாலும் பகல் 10 மணிக்கு மேல் வாக்களிப்போர் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டது. நண்பகலுக்குப் பின் கூடுதலான மக்கள் வாக்களிப்பதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டனர்.

வாக்காளர்களை உரிய இடங்களுக்கு அழைத்துச்செல்வதில் போக்குவரத்துச் சபையினர் பஸ் சேவைகளைச் சீராக நடத்தினர்.

வாக்களிப்புக்கு வசதியாக பல வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. சந்தைகள் கூடவில்லை. மக்கள் அமைதியாக வாக்களிப்புச் செய்துவிட்டுத் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பினர்.

வலிகாமம் பிரதேச வாக்களிப்பு நிலையங்களில் அசம்பாவிதங்கள் எதுவும் நிகழவில்லை.

பொலீஸ் உத்தியோகத்தர்கள் வாக்காளர்களை உரியமுறையில் வாக்களிப்பதற்கு உதவிசெய்து நெறிப்படுத்தினர்.

(ஐ-11-117-29-135-152-173-70)

## துப்பாக்கிச் சூட்டிலிருந்து தப்பினார் ஆறுமுகன்

நாவலப்பிட்டி கிறேவூட் லொவர் டிவிஷனிலுள்ள தோட்ட மக்கள் வாக்களிக்கவிடாமல் தடுக்கப்பட்டது தொடர்பாக நிலைமையை நேரில் கண்டறிவதற்காகச் சென்ற அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தெய்வாதீனமாக அவர் உயிரிழப்போ, காயமோ இன்றித் தப்பினார்.

கண்டி மாவட்ட வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளர்களே துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து தோட்டப் பகுதி மக்கள் சம்பவம் நடந்த இடத்திற்குப் பெரும் எண்ணிக்கையில் படையெடுத்து வருகின்றனர் என்று அமைச்சரின் ஊடகச் செயலாளர் மனுஷா நாணயக்கார தெரிவித்துள்ளார்.

(க)

## பிரதமர் கொழும்பிலும் ஜனாதிபதி நித்தம்புவவிலும் வாக்களிப்பு

நாடு முழுவதிலும் நேற்றுக்காலை 7 -மணிமுதல் 4 மணிவரை வாக்களிப்பு நடந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு - 7, கொலிஜ் ஹவுஸ் வாக்களிப்பு நிலையத்தில் தனது பாரியாருடன் சென்று வாக்களித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கம்பஹா மாவட்டத்தில் நித்தம்புவ மத்திய மகாவித்தியாலயத்தில் தனது வாக்கைப் பதிவு செய்துகொண்டார்.

நகரின் பல பாகங்களிலும் பொலீஸார் தீவிர ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். எல்லா வாக்களிப்பு நிலையங்களிலும் ஆயுதம் தரித்த பொலீஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அதேவேளை, பவ்ரல் அமைப்பு உட்பட எட்டுத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக அமர்த்தப்பட்டிருந்தனர்.

இவர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு உள்ளும் வெளியேயும் நின்று நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருந்தனர். (க)

## திகாமடுல்லவில் மோசடிகள் என்று முஸ்லிம் காங்கிரஸ் புகார்

திகாமடுல்ல மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களில் முஸ்லிம் காங்கிரஸ்"க்கு எதிராகத் தேர்தல் மோசடிகளும் வன்முறைச் சம்பவங்களும் கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்தன என்றும் -

அவற்றில் ஈடுபட்டவர்கள் மேற்படி மாவட்டத்தில் சுதந்திரக் கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் என்றும் -

முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசன் அலியும், பிரதித் தலைவர் பாருக் மஜீத்தும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா, தேர்தலுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் காமினி நவரத்ன மற்றும் கண்காணிப்புக் குழுவினருக்குப் புகார் செய்துள்ளனர்.

இந்த வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் இராணுவச் சீருடைக்கு ஒப்பான உடையணிந்து வாக்குச்சாவடிகளுக்குள் சென்று வாக்காளர்களைத் தாக்கியும் வாக்களிக்கவிடாமல் தடுத்தும் குழப்பம் செய்தனர் என்று முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். இந்த ஆதரவாளர்கள் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை வைத்திருந்தனர் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவர்களின் அடாவடித்தனத்தால் பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சுதந்திரக் கூட்டணியின் தேசியப் பட்டியல் வேட்பாளர் ஒருவர் விசேட அதிரடிப்படை வாகனங்களில் ஆயுதபாணிகளாகத் தமது ஆதரவாளர்களை வாக்குச்சாவடிகளுக்கு அழைத்து வந்தார் என்றும் - அங்கே கள்ள வாக்குச்சீட்டுக்கள் வாக்குப்பெட்டிகளில் திணிக்கப்பட்டன என்றும் - முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

## தேர்தல் வன்முறைகள்

அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் அசம்பாவிதங்கள்:-

★ சம்மாந்துறை முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் நௌஷாத்தின் வாகனச் சாரதி தாக்கப்பட்டார்.

★ சம்மாந்துறை மு.காவுக்கு ஆதரவு வழங்கிய சுயேச்சைக்குழு வேட்பாளர் ரசூல் தாக்கப்பட்டார்.

★ சம்மாந்துறையில் மு.கா. வேட்பாளர் மன்சூரின் 'பிக் அப்' வாகனம் அடித்து நொறுக்கப்பட்டது.

★ சம்மாந்துறையில் முகமூடி அணிந்த ஒரு கோஷ்டியினர் மு.கா. ஆதரவாளர்களைப் பல இடங்களிலும்தாக்கினர்.

★ சம்மாந்துறையில் மு.கா. பிரமுகர் ஒருவரை சுதந்திரக் கூட்டணி தேசியப் பட்டியல் வேட்பாளர் அன்வர் இஸ்மாயில் தாக்கினார்.

★ கல்முனைக்குடி அல்பஹ்ரியா மகா வித்தியாலய வாக்குச்சாவடியில் கடமையாற்றிய மு.கா.தேர்தல் முகவர் ஒருவர் சுதந்திரக் கூட்டணி வேட்பாளர் எச்.எம்.எம்.ஹரீஸின் ஆதரவாளர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு, ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

★ சாய்ந்தமருது 'நுஆ' தலைவி பேரியல் அஷ்ரப்பின் வாகனம் மீது கல்வீச்சு நடத்தப்பட்டது.

★ சாய்ந்தமருது அல் - கமனூன், மருதமுனை ஷரிபுத்தீன் வித்தியாலய வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர் இடாப்புகள் பறிக்கப்பட்டன.

★ கல்முனைக்குடியில் மு.கா. பிரமுகர் ஒருவரின் 'பிக் அப்' வாகனம் தாக்கப்பட்டது.

**மலையகம்**

★ கண்டி - நாவலப்பிட்டிய தேர்தல் தொகுதியில் - கிரேக்கத் தோட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி ஆதரவாளர்கள், பொதுமக்களை வாக்களிக்கச் செல்லக்கூடாது எனப் பயமுறுத்தினர்; சிலர் தாக்கப்பட்டனர். இதனால், 220 வாக்காளர்களில் 6 பேர் மட்டுமே வாக்களித்தனர்.

அங்கு 20 லயக் காம்பராக்கள் உடைக்கப்பட்டன. காடையர்கள், பொலீஸ் வாகனங்கள் மீது கற்கள் வீசினர். அங்கு தொடர்ந்து பதற்றம் நிலவுகின்றது.


★ கம்பளை - கலஹாவில் தோட்டத் தொழிலாளர்களின் 100 வாக்காளர் அட்டைகள் இனந்தெரியாதோரால் பறித்துச் செல்லப்பட்டன.

★ கேகாலை நகருக்கு அண்மையில் உள்ள கோலிண்டா தோட்டம் மற்றும் அம்மன்பிட்டிய தோட்டம் ஆகிய இடங்களில் ஏப்ரல் முதலாம் திகதி இரவு ஐ.தே.மு. - சுதந்திரக் கூட்டணி ஆகிய இரு கட்சிகளும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டன.

(க)

உ

# மூளாய்
# ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம்
# தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் - 03-04-2004



## ஆலய வரலாறு

ஈழமணித் திருநாட்டில் யாழ்ப்பாண மாநிலத்து வலி.மேற்குப் பகுதியில் மூளாய் கிராமத்தில் ஒரே சுவருடன் இணைந்த விநாயகப் பெருமானும், முருகப் பெருமானும் மூல மூர்த்திகளாக விளங்கும் ஆலயங்களில் ஒன்றான ஸ்ரீ முத்துக்குமார சுவாமி தேவஸ்தான வருடாந்தத் தேர் உற்சவ தினம் இன்றாகும்.

அந்நியர் ஆட்சி மேலோங்கி இந்து சமயம் நசுக்கப்பட்ட நிலையில் எம் மூதாதையர் தத் தமது வளவுகளில் குலதெய்வங்களை வைத்து வழிபட்டு வந்தனர். 19 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரால் மேற்கொண்ட இந்து சமய மறுமலர்ச்சியின் போது மூளாயில் பரிவார மூர்த்திகளுடன் சிவன் அம்மன் பலிபீடத்துடனும் வள்ளி தேவசேன முத்துக்குமாரசுவாமி ஆதிமூலத்துடன்அழகியகோயிலை தன் சொந்த முயற்சியால் கட்டி எழுப்பியவர் மூளாய் சின்னப்பா மயில்வாகனம் நிற்சிங்க முதலியார் ஆவார்.

தனிமனிதனால் கட்டப்பெற்ற ஆலயமானாலும் அயல் கிராமசமூகத்தினருக்கும் உபயங்களைப் பகிர்ந்து கொடுத்து சகல மக்களையும் ஈடுபாடு அடையவைத்தார்.

⁂ ⁂ ⁂ ⁂ ⁂

## நிர்வாக வரலாறு

1887 ஆம் ஆண்டு: மூளாய் **மயில்வாகனம் சின்னப்பா நிற்சிங்க முதலியாரால்** இக்கோயில் ஸ்தாபிக்கப்பட்டது.
1920ஆம் ஆண்டுவரை ஸ்தாபகரே நிர்வாகம் செய்தார்.
1920 ஆம் ஆண்டு: **ஸ்தாபகர் மனைவி குஞ்சாப்பிள்ளை**
1925ஆம் ஆண்டு : **ஸ்தாபகர் மகள் வள்ளியம்மை மயில்வாகனம**
1965 ஆம் ஆண்டு: **இராமசாமி தம்பையா** J.P.
1979 ஆம் ஆண்டு: **தம்பையா மனைவி சிவபாக்கியவள்ளி நாச்சியர்**
1985 ஆம் ஆண்டு: **தம்பையாவின் மூத்தமகள் பொன்மலர் இராஜேஸ்வரன்.**

ஸ்தாபகரின் சாதனத்தில் வெளிப்படுத்தியதன் பிரகாரம் இவரின் வம்சாவழியினர் முறையாக பராமரித்தும், நிர்வகித்தும் வந்துள்ளனர். கூடிய காலப்பகுதி பெண்கள் பொறுப்பேற்று நடத்தியமை குறிப்பிடத்தக்க அம்சமாக உள்ளது (**Gender Equity**).

## கோயில் பதிவு

**அன்று**

1893 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி எழுதப்பட்ட 6392 இலக்கம் இடப்பட்ட சாதனத்தினை பிரசித்த நொத்தாரிஸ் சண்முகம் கதிரவேற்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**இன்று**

பிரதேச அபிவிருத்தி இந்து சமய கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம், மூளாய், சுழிபுரம் என 28.11.1987இல் HA/5/JA/597 என்ற பதிவு இலக்கத்தினை உடையதாக உள்ளது.

**திட்டமிடலும் ஆவணப்படுத்தலும்**

பல்நாடுகளில் தொழில்புரியும் பொழுது கற்றுக்கொண்ட அனுபவத்துடன் கூடிய அறிவினைப் பயன்படுத்தி நீண்டகால நோக்கில் சிறப்பான பரிபாலனத்திற்கென ஒரு திட்டத்தை சகல விடயங்களும் அடங்கியுள்ளதாக (நிர்வாகம்,பரிபாலனம்,நித்திய பூசை,அதற்குவேண்டிய பொருள்கள்)வகுத்து ஸ்தாபகர் தானே தனிமனிதனாகக் கோயிலைக் கட்டியெழுப்பியபொழுதே திட்டமிட்டு ஆவணப்படுத்தியமை ஒரு நல்ல வழிகாட்டலாகும்.

## சிதம்பரத்தில் யாழ்ப்பாண மணி

**நூற்றாண்டுகளுக்கு முன்பு யாழ். சின்னப்பாபிள்ளை இந்தியாவிலுள்ள சிதம்பரம் திருக்கோயிலில் ஆராய்ச்சி மணி ஒன்று உபயமாக 1884 ஆம் ஆண்டு கொடுத்துள்ளார். இக்கோயிலில் நுழைந்தவுடன் நடராசா சந்நிதியின் இடதுபுறத்தில் மரத்தட்டுக்குள் அமைக்கப்பட்ட இந்த மணி ஜேர்மனியில் போக்கம் என்ற இடத்தில் வார்க்கப்பட்டு இந்தியா எடுத்துச்சென்றுள்ளார். அன்றுதொட்டு இன்றுவரை ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் நேரம் அறிவிப்பதற்கு, எமது அயலநாடாகிய இந்தியாவில் இந்தமணி பயன்படுகிறது.**

## வெளிப்புறச் சூழலும் உச்ச வளப்பயன்பாடும் அபிவிருத்தியும்

ஒரேசுவரினால் இணைக்கப்பட்ட இருகோயில்கள் பொதுவான வெளிவீதி, தேர், சப்பறம், வாகனங்கள், பூந்தோட்டம் ஏதோ ஒருவித பிணைப்பினை மக்களிடையே ஏற்படுத்துகிறது.

சூழலில் அமைந்த கூட்டுறவுச்சங்கம் , சமூக தொண்டுகளுக்கான கட்டடங்கள், இந்து இளைஞர் மன்ற வாசிகசாலை, வெளியரங்கு சிறப்பு அம்சமாக உள்ளது.

## சுமைதாங்கி - தண்ணீர்த்தொட்டிகள்

கோயிலை அண்மித்த இடத்தில் சுமைதாங்கி, வழிப்போக்கர்களின் சுமைகளை வைத்து களைப்புஆறுவதற்கும், கால்நடைகள் தாகசாந்தி அடைவதற்கு தண்ணீர்த்தொட்டிகள் அமைத்தல் எமது முன்னோர்களின் பொதுப்பணிகளாகும். இது எமக்கு ஓர் எடுத்துக்காட்டு.

## அழகிய சித்திரத்தேர்

அற்புதமான கலைநிறைந்த புதுமை விளங்கும் சித்திரத்தேரை உருவாக்கி 24.06.1991 வெள்ளோட்டவிழா நடைபெற்றது. புதியதேர் இருப்பிடம், தேர்முட்டி, படிகள், அழகாக அமைக்கப்பட்டு 13.09.1999 சாந்திவிழா நடைபெற்று தேர் இருப்பிடம் வந்தடைந்தது. 2000 ஆம் ஆண்டு ஆறுமுகசுவாமி வள்ளி தெய்வானையுடன் எழுந்தருளிகளாக உபயமளிக்கப்பட்டு எட்டுத்திக்கும் ஏக காட்சிகொடுத்து பவனிவந்து அடியார்களுக்கு அருள்பாலித்தார்.

மூளாய் ஸ்ரீ சித்திவிநாயகர், ஸ்ரீமுத்துக்குமார சுவாமி மூல மூர்த்திகளாக உள்ள இருஆலய உபயகாரர்களாலும் அமைக்கப்பட்ட தேர்த்திருப்பணிச் சபை பதிவுசெய்யப்பட்டு தேர்த்திருப்பணிகளை செவ்வனே நடைமுறைப்படுத்தி வருவது ஒரு சிறந்த பங்காளித்துவ (Partnership) முயற்சியாகும்.

## இயற்கை வளம் பேணல்

இயற்கையாக நாம் பெறும் மழைநீரை சேகரிப்பதனால் நிலத்தடி நீர், உவர்நீராகா வண்ணம் பாதுகாப்பதற்கும் கால்நடைக்கு தாக சாந்தி, மனிதரின் பாவனைக்கும் உதவுவதற்கென கோயிலை அண்டி இருகேணிகள் நிர்மாணித்தமை ஒருவரப்பிரசாதமாகும். யாழ். மாவட்டத்தில் நீரினைப் பேணிப்பாதுகாக்க வேண்டிய தேவை தற்காலத்தில் ஏற்பட்டுள்ளது என்பதனை கவனத்திலெடுத்து மழை நீர்த்தேக்கம் கோயில்களை அண்டிச் செய்வதற்கு மூதாதையரின் வழிமுறைகளைப் பின்பற்றுவோம்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல இன Great Dane நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. சோடியாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு). முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30411)

MD-90 மோட்டார் சைக்கிள் ஒரு கைப்பாவனையில் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.55, சீனியர் லேன், கலட்டி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (30384)

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 19.04.04 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும. பருத்தித்துறைக் கிளையிலும் பதிவு செய்யலாம் தொடர்பு:19, முருகேசா ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(30412)

## தேவை

யாழ்.நகரில் அரச தொழில் புரியும் சிறிய குடும்பத்திற்கு வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்கு பெண் உதவியாளர் தேவை. குடும்பப் பொறுப்புக்கள் இல்லாதவர் விரும்பப்படுவர். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: மே.பா இல.2214, உதயன், யாழ்ப்பாணம். (30415)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்ப ஆசிரியை B.A. (Dip.In.Ed.) (அத்தம்) 1968இல் பிறந்த மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. (அரச அல்லது அரச கூட்டுத்தபானத்தில் தொழில் புரிபவர் விரும்பத்தக்கது) தொடர்பு: வி.இல 2212 மே/பா உதயன்.(30399)

## கலைஞர் தேவை

*யாழ். பிரபல இசைக்குழு ஒன்றிற்கு குரல்வளமுள்ள பெண் பாடகிகள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும்.*

விளம்பர இலக்கம் -2213
உதயன் பணிமனை,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(40-21-13-17) (C/34234)

## தவறிவிட்டது

பொன்னரசி துரைரட்ணம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.697411992), விசேட அடையாள அட்டை, தொழில் அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், இலங்கை வங்கிப் புத்தகம், A.T.M அட்டை என்பன அடங்கிய சிறிய கைப்பை யாழ்.பஸ் நிலையத்திற்கு முன்பாக தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் C/O Dr.முத்துக்குமாரசுவாமி இல.91, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும முகவரியில் ஒப்படைத்துதவவும்.(30401)

## நெடுந்தீவுப்பகுதி ஓய்வூதியர்களுக்கு!

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஓய்வூதியர்கள் தமக்குரிய ஏப்ரல் மாதத்திற்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை எதிர்வரும 6ஆம் திகதி பிரதேச செயலகத்திற்கு நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் -

உறுதிச்சீட்டுக்களை பெறவரும் போது ஓய்வூதியர்கள் தமது தேசிய அடையாள அட்டை அல்லது ஓய்வூதியர் அடையாள அட்டையை எடுத்து வரவேண்டுமெனவும் -

நெடுந்தீவு உதவி அரச அதிபர் கேட்டுள்ளார்.

(ஒ)

# ஆள்கடத்தல் மையமாகிறது இலங்கை: பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.03

இலங்கை மீண்டும் ஆள்கடத்தல் மையமாக விளங்குவதாக பாகிஸ்தான் அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளார்கள்.

பாகிஸ்தானில் சட்டத்தை நிலைநாட்டும் அமைப்புக்கள் இலங்கையின் வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் இந்தக் குற்றச்சாட்டு இடம்பெற்றிருக்கின்றது.

சமீபத்தில் இலங்கை குடிவரவு அதிகாரிகள் பாகிஸ்தானைச் சேர்ந்த 254 பேரை கைதுசெய்தது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சு ஆள்கடத்தலை தடுப்பது தொடர்பான சட்டதிட்டங்களை முழுமையாக அனுசரித்து நடக்காத நாடாக இலங்கையை வரையறுத்துள்ளது. ஆனால் அத்தகைய சட்டதிட்டங்களுக்கு உடன்படுபவர்களாக தம்மை மாற்றிக்கொள்ள இலங்கை அதிகாரிகள் முயன்று வருவதாகவும் ஆள் கடத்தல் தொடர்பான தமது அறிக்கையில் அமெரிக்கா தெரிவித்துள்ளது. (ம-ரி)

# மும்மொழிப் பயிற்சித் திட்டத்தின் நிறைவு நிகழ்வு சாவகச்சேரியில்

தென்மராட்சி,ஏப்3

அரசகரும மொழித் திணைக்களததினால் தென்மராட்சிப் பிரதேச அரச அலுவலர்களுக்கு நடத்தப்பட்ட மும்மொழிப் பயிற்சித் திட்டத்தில் சிங்கள மொழிப் பாடநெறி கற்றவர்களின் இறுதி நாள் வகுப்பும் பிரிவுபகார விழாவும் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) க.உதயகுமார், சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் இ.கயிலைநாதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-117)

## கொடிகாமத்தில் நடமாடும் செயலகம் ஏப். 27 இல் இடம்பெறும்

தென்மராட்சி,ஏப்.3

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் கொடிகாமத்தில் நடத்தப்படும் நடமாடும் செயலகம் எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெறாது என்றும்-

இந்த நடமாடும் செயலகம் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறும் என்றும்-

பிரதேசச்செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (ஒ-117)


உ
முருகன் துணை




அருள்மிகு
நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய

**மணவாளக்கோல விழா**

**04.04.2004 ஞாயிற்றுக்கிழமை**

காலை 7.30 மணிக்கு
ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணியப் பெருமானுக்கு
1008 (பஞ்ச குண்ட) சங்காபிஷேகமும்
ஐந்து பரிவார மூர்த்திகளுக்கும் ஸ்நபன அபிசேகமும் இடம்பெறும்.
பிரதம குரு:
பிரம்மஸ்ரீ கிரியாரத்ன சுப்ரகௌரிபால சிவாச்சாரியார்.
காலை 6.30 மணிக்கு : **ஆனந்தக் காவடி**
ஆஸ்தான வித்துவான் S.T. சுந்தரேசன்,
K.P.ரங்கன் குழுவினரின் நாதஸ்வர இசையுடனும்
உறுமிமேள இசையுடனும் நவிண்டில் குலனையம்பதி விநாயகர்
ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும்.
காலை 9.00 மணியளவிலும் மாலை 2.30 மணியளவிலும்
ஆலய மணிமண்டபத்தில்

 **நாதஸ்வர கானமழை** 

L.S ஜெயநாதன் S.T.சுந்தரேசன K.P. ரங்கன்
குழுவினர்கள்

மாலை 5.00 மணிக்கு - யாழ் பல்கலைக்கழக நாட்டார் கழக
காத்தவராயர் புகழ்
வில்லிசைக் கலாமணி பொ.அருந்தவநாதனின
யாழ். அம்பிகை வில்லிசைக் குழுவினர் வழங்கும்

**வில்லிசை** விடயம் : ஸ்ரீவள்ளி

*மாலை 7.00 மணிக்கு வசந்த மண்டப பூசையும், பூந்தண்டிகையில் சுவாமி திருவீதியுலாவும் நாதஸ்வர கானமழையுடன் இடம்பெறும்.*

குறிப்பு: அபிஷேகத்திற்குத் தேவையான பால். இளநீர். நெய். பன்னீர். மலர் போன்றவை உள்ளன்போடு ஏற்றுக்கொள்ளப்படும்.

அனைவரும் வருக! அருளமுதம் பெறுக !!

நெல்லியடி
தடங்கன் புளியடி முருகன் அடியார்கள்

(C/24231)(40)



**ஐடியல் அக்கடமி**
சீரணிச் சந்தி , சண்டிலிப்பாய்
A/L 2006 கலை, வர்த்தகம்

| | | |
|---|---|---|
| Tam : | V.M. லிங்கம் | Acc: V.S.T. குமரன் |
| Hi.c : | T.ஸ்ரீஸ் | Eco: S. ஜெயகுமார் |
| Log : | E.S.பவன் | Com: உமாகாந் |
| Drama : | P.கணேஷ் | Eng: V.விஜயபாஸ்கர் |
| Geo : | N. சங்கர் | |

ஆரம்பம்: 05.04.2004 திங்கள் 3.00 p.m
(30404)(40-21-12-13)



உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

**திருமண அழைப்பு**

*அன்புடையீர்!*
நிகழும் மங்களகரமான சுபானு வருடம் பங்குனி மாதம் 22ஆம் நாள் (04-04-2004) ஞாயிற்றுக்கிழமை
பகல் 10.45 மணிமுதல் 12.40 மணிவரையுள்ள உத்தர நட்சத்திரமும்
அமிர்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தவேளையில்

திரு.திருமதி கதிரேசு
தம்பதிகளின் புதல்வன்
திருநிறை செல்வன்
**சாந்தகுமார்** (சாந்தன்)
அவர்களுக்கும்



திரு.திருமதி பாலசிங்கம்
தம்பதிகளின் புதல்வி
திருநிறை செல்வி
**ஜெயசுதா** (சுதா)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணையுடன் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து வாழ்த்துவதுடன், தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

நிரந்தர முகவரி
**வி.கதிரேசு,**
*5ஆம் வட்டாரம்.*
*நயினாதீவு.*

தற்காலிக முகவரி:
**தி.குருநாதன்,**
*பூநாரி லேன்.*
*கொக்குவில் மேற்க.*
*கொக்குவில்.*



[இரு வீட்டார் அழைப்பு]

**திரு. சி.பாலசிங்கம்**
(காபரேற்றர் ஆனந்தம்),
*130. சிவப்பிரகாசம் வீதி.*
*வண்ணார்பண்ணை.*
*யாழ்ப்பாணம்.*

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)
(30391) (19-21-13-17)



புதுவருடப்பிறப்பை முன்னிட்டு
**CDகள் மலிவு விற்பனை**
03-04-04 தொடக்கம் 15-04-04 வரை
⌘ ஓடியோ CD (மலேசியா) 80/-
⌘ பழைய புதிய ஓடியோ, வீடியோ பக்திப்பாடல்கள்
⌘ ஐங்கரன் ஓடியோ CDகள்
⌘ ஐங்கரன் வீடியோ படங்கள்
⌘ வீடியோ CD படங்கள் 150/- முதல் 250/- வரை
⌘ DVD படங்கள் 225/-
⌘ Soft Ware, Game CDகள் 100/-
⌘ MP3 CD கள்
*அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள*
**அல்டி எலக்ரோனிக்ஸ்**
15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
T.P 222 2676 E.mail aldielec @ sltnet.lk
(சி-34044) (21-13-17)





உங்கள் மகிழ்ச்சியான புதிய வாழ்வு மங்களகரமாக ஆரம்பிக்கட்டும்....
அற்புதமான அழைப்பிதழ்களோடு....!

ஆயிரம் ஆயிரம் தெரிவுகள்! சொற்ப விலையில்..!
Wedding Bags, Cake Box with Superior Printing

போஸ்கோ நிறக்கலை பதிப்பகம்
252, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

boasco_boss@hotmail.com T.P: 021 222 6549

போஸ் காகிதாதியாளர்
03, நவீன சந்தை,
மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

## திருந்துவது அவசியம்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கருணா குழுவினரின் அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள் எல்லை மீறிச் சென்று கொண்டிருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தை விட்டு வடபகுதியைச் சேர்ந்தோரை உடனடியாக வெளியேற வேண்டும் என்று கருணா கும்பல் மிரட்டி வருவது பற்றிய செய்தி தொடர்ந்து வெளியாகிக்கொண்டிருக்கின்றது.

வர்த்தகர்கள், பொதுமக்கள், மாணவர்கள், அரச அலுவலர்கள் என சுமார் 5 ஆயிரம் தமிழர்களை கருணா கும்பல் மட்டக்களப்பிலிருந்து மிரட்டிக் கலைத்திருக்கின்றது.

பொதுத் தேர்தல் வாக்களிப்பு நடக்கவிருந்த சமயத்தில் இந்த அச்சுறுத்திக் கலைக்கும் அட்ட காசம் அரங்கேறியிருக்கின்றது.

மட்டக்களப்பு அரச வைத்தியசாலையே ஸ்தம்பிக்கும் அளவுக்கு அதிகாரிகள், பொதுமக்கள் மட்டக்களப்பை விட்டு வெளியேறும் அவல நிலைமை ஏற்பட்டுள்ளது.

இரண்டு தசாப்தங்களாக ஈழத்தமிழர்கள் போராடி வந்த 'தமிழர் தாயகம்' என்ற அடிப்படைக் கோட்பாட்டையே தனது சுயநலத்திற்காக முறிக்க முயல்பவர் கருணா.

ஈழத்தமிழினத்துக்காக ஈகம்சிந்திப் போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிகளை கோட்பாட்டு ரீதியாகவும், வேறு காரணங்களுக்காகவும் எதிர்த்து வரும் சிறிய, சிறிய இயக்கங்கள், அரசியல் அணிகள் நம் மத்தியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இல்லாமல் இல்லை.

உதாரணமாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியையும் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவையும் கூறலாம்.

ஆனால், அந்தக் கட்சிகூட 'தமிழர் தாயகம்' என்ற கோட்பாட்டை நிராகரித்தோ, புறம் ஒதுக்கியோ நடந்தது இல்லை. வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தைத்தான் ஈ.பி.டி.பி., புளொட் போன்ற தமிழ் அமைப்புகளும் கூட வற்புறுத்தி, வலியுறுத்தி நிற்கின்றன.

அதாவது, ஐக்கிய தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டில் ஈழத் தமிழரிடையே எந்த முரண்பாடும் இல்லை.

ஆனால், இவை எல்லாவற்றுக்கும் வித்தியாசமாக ஐக்கியத்தை உடைக்கப் புறப்பட்டிருக்கின்றார் கருணா.

தாயகக் கோட்பாட்டை விலை பேச வந்த கோடரிக் காம்பு, தாம் என்பதை நிரூபிக்க முயன்று நிற்கின்றார் அவர்.

தாம் புரிந்த மிகமோசமான குற்றங்களை மூடி மறைத்து, இயக்கத்தின் தண்டனையிலிருந்து தப்புவதற்காக, விடுதலைப் போராட்ட இயக்கத்தையே பிளந்து, பிரதேசவாதம் பேசி கேடு செய்கிறார் கருணா. அவருக்கு அங்கு ஒத்து ஊத முனைகிறது ஒரு கும்பல்.

யுத்தம் நிறுத்தப்பட்டு, இதுவரை கால யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு ஆக்கபூர்வமான முன்முயற்சிகளும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வரும் இக்கால கட்டத்தில் தான் - குறுகிய பிரதேசவாதம் பேசி, அப்பாவிப் பொது மக்களைத் தனது சுய[illegible]க்காக மிரட்டிக் கலைக்கின்றார் கருணா.

மக்களை அச்சுறுத்திக் கலைக்கும் இந்தப் போக்கை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதரகம், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், உலக உணவுத் திட்டம் போன்ற பல சர்வதேச அமைப்புக்கள் கண்டித்திருக்கின்றன.

இந்த அச்சுறுத்தல் அட்டகாசத்தால் நேற்று பொதுத்தேர்தல் வாக்களிப்பு மட்டக்களப்புப் பிரதேசத்தில் சூடு பிடிக்கவில்லை என்று கூறப்படுகின்றது. அங்கு முஸ்லிம்களின் பிரதேசத்தில் சுறுசுறுப்பான வாக்களிப்பும், தமிழர்களின் பிரதேசத்தில் மந்தமான வாக்களிப்பும் இடம்பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈழத் தமிழர்கள் அனைவரும் தமது அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்காக ஏனைய பிரதேசங்களில் மும்முரமாக வாக்களித்த போதும், மட்டக்களப்பில் மட்டும் தமிழர்களின் கருத்துச் சரியாக வெளிப்படுத்த முடியாத விசன நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்தக் குழப்பத்துக்கும் குற்றங்களுக்குமான பொறுப்பை கருணாவும் அவரது கும்பலும் தான் முற்றுமுழுதாக ஏற்கவேண்டும்.

இத்துணை குழப்பங்கள், நெருக்கடிகள், வரலாற்றுத் துரோக நிகழ்வுகள் ஆகியவற்றுக்கு மத்தியிலும் பொறுமையையும் நிதானமும் பேணி, தமிழர்கள் தங்கள் அபிலாசையை வெளிப்படுத்தத்தக்கதாக அமைதியான தேர்தலுக்கு வழிசெய்துள்ளனர் புலிகள்.

ஈழத்தமிழர்களின் ஏகோபித்த கருத்தைப் புரிந்து கொண்டு தனதுபோக்கை மாற்றி, தன்னைத் திருத்திக்கொள்வதுதான் கருணாவுக்கும் நல்லது அவரைச் சார்ந்த குழுவுக்கும் நல்லது. அப்படிச் செய்வதுதான் தமது பிரதேச மக்களுக்கும் தமது இனத்துக்கும் கருணாவும் அவரது கும்பலும் செய்யக்கூடிய நற்காரியமாகும்.

# வடபகுதி மக்களை அச்சுறுத்தி வெளியேற்றுவது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்

### மட்டக்களப்பு நிலைமை குறித்து ஐ.நா. அமைப்புகள் கண்டனம்

கொழும்பு,ஏப்.3

மட்டக்களப்பிலிருந்து வடபகுதி மக்கள் வெளியேற்றப்படுவதை ஒரு துன்பியல் சம்பவமாக மட்டும் பார்க்க முடியாது. இது ஓர் அப்பட்டமான மனித உரிமை மீறல்.

இவ்வாறு, யு.என்.டி.பி., யு.என்.எச்.சி.ஆர், யு.என்.சி.ஈ.எவ். மற்றும் டபிள்யூ.எம்.பி. ஆகிய அரசசார்பற்ற ஐ.நா. அமைப்புகள் கூட்டாக விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவித்துள்ளன.

இந்த அமைப்புகளின் வதிவிடப்பிரதிநிதிகள் விடுத்துள்ள அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அச்சுறுத்தல்கள் அல்லது துன்பங்களுக்குள்ளாகலாம் என்ற பயப்பீதியில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வடபகுதி மக்கள் வெளியேறி வருகின்றார்கள் என்ற செய்தி எமக்குப் பெரிதும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. மட்டக்களப்பில் உள்ள வடபகுதி வர்த்தகர்களுக்கு விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் அச்சுறுத்தல்களுக்கு மார்ச் 31 ஆம் திகதி உள்ளூர் பத்திரிகையான தமிழ் அலையில் வெளியிடப்பட்ட ஒரு சிறு செய்தியும் காரணமாக இருந்துள்ளது.

20 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் உள்நாட்டுப் பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்த சுமார் 3 லட்சத்து 56 ஆயிரம் மக்கள் மீண்டும் தம் சொந்த இடங்களுக்குத் திரும்பக் கூடிய சந்தர்ப்பம் புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் உருவாகியிருக்கும் இந்த நேரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இப்படியான ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்கிறவர்கள் உட்பட சகல பிரஜைகளும் மனித உரிமைகள் பிரகடனத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் கீழ் உயிர் வாழ்வதற்கும் பாதுகாப்பிற்கும் உரிமை உடையவர்கள் 17 ஆம் அத்தியாயத்தின் கீழ் சொத்துகளை சொந்தமாக வைத்திருக்கவும் உரிமையுண்டு.

இந்த உரிமைகள் மறுக்கப்படுவதை நாம் கடுமையாகக் கண்டிக்கிறோம். எனவே, சகல தரப்பினரையும் பொதுமக்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி வலியுறுத்துகின்றோம். இந்த உரிமைகளை எவரும் துஷ்பிரயோகம் செய்தால் அதற்கு அவர்கள் பொறுப்பேற்கவேண்டும். சட்டத்தையும் ஒழுங்கையும் பராமரிக்கும்படியும் வலியுறுத்துகின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அச்சுறுத்தல்களைத் தூண்டும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தும்படியும், பொதுமக்களுக்கு குறிப்பாக குழந்தைகளுக்கு இடம்பெயர்வின் மூலம் ஏற்படக் கூடிய துன்பங்களைத் தவிர்க்கும் வகையில் நிதானத்துடன் செயற்படுமாறும் சகல தரப்பினர்களையும் இந்த ஐ.நா. அமைப்புகள் கேட்டுக்கொண்டுள்ளன. (ப)

# மூன்று கடற்றொழில் சமாசங்களுக்கு மீன் சேகரிக்க குளிரூட்டிய நிலையங்கள்

### உலக உணவு விவசாய நிறுவனம் நிதியுதவி

யாழ்ப்பாணம்,ஏப்.3

உலக உணவு விவசாய நிறுவனத்தின் நிதியுதவியுடன் மூன்று கடற்றொழில் சமாசங்களுக்கு குளிரூட்டப்பட்ட மீன் சேகரிக்கும் நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம், வேலணை, வடமராட்சி வடக்கு ஆகிய பிரதேசங்களிலுள்ள மூன்று கடற்றொழில் சமாசங்களுக்கு கடல் உணவுகளைச் சந்தைப்படுத்துவதற்காக இந்த நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், மற்றும் வேலணை ஆகிய இடங்களில் நிலையங்கள் அமைப்பதற்கு ஏற்கனவே இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வடமராட்சி வடக்கில் அமைக்கப்படவுள்ள நிலையத்திற்கான இடம் தெரிவு செய்யும் நடவடிக்கை தற்போது நடைபெற்று வருகின்றது. இத்திட்டம் 9 மாதங்களுக்குள் பூர்த்தியாக்கப்படவுள்ளது.

மூன்று நிலையங்களையும் அமைப்பதற்கு சுமார் ஒரு கோடி ரூபா நிதி செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை -

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் இந்த மூன்று கடற்றொழில் சமாசங்களுக்கும் தலா இரண்டு என்ற வீதம் குளிரூட்டப்பட்ட ஆறு வாகனங்களும் வழங்கப்படவுள்ளன. (ஒ-8-7)

# யாழ்.பல்கலையில் 3 துறைகளுக்கு வெற்றிடம் நிரப்ப மாணவர் அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்.பல்கலைக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், விவசாயம் ஆகிய துறைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களது பெயர் விவரங்கள் வருமாறு:-

**உயிரியல் விஞ்ஞானம்**

ஈ.பி.ரஜீவா, பி.ஆரணி, வை.கணதரன், என்.சிவயோகநாதன், எஸ்.சத்தியரூபன், ஆர்.விமலச்சந்திரன், ஜே.மகாலிங்கம், எஸ்.சசிரேகா, ஆர்.வசந்தகுமார், எஸ்.குகதாசன், ஆர்.சிவபாதம், என்.பேரின்பநாயகம், ஏ.போஜினி, எஸ்.பரம்சோதி, ஏ.சண்முகதாஸ், ஏ.சிவலிங்கம், எஸ்.சாம்பசிவம், ஜே.சடாச்சரம், என்.வரதரூபி, எஸ்.தர்மிளா, சி.தர்சிகா, பி.ஜனனி, பி.சுப்பிரமணியம், கே.துளசி, பி.தர்மீசன், வை.அமரதீபன், எஸ்.கிருஷான்தன், ஆர்.சசிகுமார், எம்.அமிர்தஹிரணன்.

**பௌதிக விஞ்ஞானம்**

எஸ்.கணேசமூர்த்தி, ஏ.ரசிகரன், சி.யசோதா, கே.எஸ்.கிருஷ்ணன், ரி.செந்தூரன், வி.முத்துக்குமாரசாமி, எம்.விஜிதா, ஏ.ரமேஷ், எஸ்.பார்த்தீபன், ஏ.சாம்பசிவமூர்த்தி, ஏ.பிரதீபன், எஸ்.சிவநாதன், ஏ.எழில்ராஜ், ஏ.மகாஞானசம்பந்தர், ரி.சுதாரிணி, ரி.ஜெகன், கே.அசோக்குமார், கே.மணிவண்ணன், கே.கோமகன், ரி.ஜயந்தன், ஈ.கார்த்திகா, கே.உதயராசா, எச்.அரியரட்ணம், ரி.சுஜீவன், ரி.தவகுமார், கே.வசீகரன், வி.நிமலேஸ்வரன், வி.விஷ்ணுரூபன், எஸ்.வித்தியா, ஏ.ஆர்.அமிர்தராஜ், பி.கணபதிப்பிள்ளை, வி.ஜதுஷென், கே.நடராஜா, என்.நிரோஷன், டபிள்யூ.வடிவேல், எம்.மகேந்திரராஜா, பி.முரளீதரன், எஸ்.மதிதரன், ஈ.விஜிதா, ஆர்.அமுலயன். எஸ்.சிவகுமார், கே.பஞ்சலிங்கம், என்.தமயந்தி.

**விவசாயம்**

ஏ.செகராஜா, எஸ்.சுதாகர், பி.நிசாந்தினி, வி.விசாகன், எஸ்.சங்கீதா, வை.நிருஷாந்தன், பி.பத்மாஜெனி, வி.தேவகாந்தன், ஆர்.கேசவரூபன், பி.ஜெயந்தன், கே.கலைவாணி, ஏ.கே.நிரஞ்சன், எஸ்.பாவனாசம்சிவன், ஏ.இந்திரகுமார், எஸ்.சோபிகா, கே.பஞ்சநாதன், ரி.கந்தசாமி, ஆர்.நாகேந்திரன், எஸ்.மதனரூபன், ரி.கஜந்தன், ஆர்.நவரட்ணம், பி.அஞ்சனா, ரி.சந்திரிக்கா, பி.பாலேந்திரா, எஸ்.ராஜகுலவீரசிங்கம், ஜி.யதுநந்தன், வி.பரணிதரன், ஜே.எஸ்.கே.பிரகாஷ், என்.நித்தியா, கே.வேலாயுதம், பி.றெசாஷிரணி கே.கண்ணதாசன். (ப-6-5)

# திருநெல்வேலிச் சந்தைப்பகுதியில் கூரையின்றி வியாபாரிகள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்.திருநெல்வேலிச் சந்தையில் மரக்கறி விற்பனைப் பகுதிக கட்டடத்தின் ஒரு பகுதிக் கூரை அகற்றப்பட்டு ஏறத்தாழ இரண்டு மாதங்களாகியும் எதுவித புனரமைப்புப் பணிகளும் இடம்பெறவில்லை. இதனால், அங்கு வியாபாரம் செய்து வந்தவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதுகுறித்துப் பிரதேசசபைச் செயலாளரிடம் கேட்டபோது 17 லட்சம் ரூபா செலவில் திறந்த வெளிக்கட்டடம் அமைப்பதற்கான பணி ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்பட்டு ஏறத்தாள மூன்று மாதங்கள் ஆகிவிட்டன என்றும் -

ஒப்பந்தகாரரின் வேண்டுகோளுக்கமைவாக ஒன்றரை மாதங்களுக்கு முன்னதாகத் தகரக் கூரைகள் அகற்றப்பட்டதாகவும் -

ஆயினும், ஒப்பந்தகாரர்கள் இதுவரை வேலையை ஆரம்பிக்கவில்லை என்றும் - அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து ஒப்பந்தகாரர்களுக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (ஒ-69)

### நாளை

பங்குனி 22
ஞாயிற்றுக்கிழமை
(04.04.2004)
திதி : சதுர்த்தசி
மாலை 6.38 வரை.
நட்சத்திரம் : உத்தரம்
இரவு 7.59 வரை.
பங்குனி உத்தரம்
சுபநேரம்: 9.09-10.39
ராகுகாலம்: 4.39-6.09
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பணிந்து வாழ்ந்தால் உயர்ந்து போகலாம்; விட்டுக்கொடுத்தால் மேலும் உயரலாம்.

# பொலீஸ் நிலைய விடுதியிலிருந்து துப்பாக்கி திருடியவர் கைது!

கொழும்பு,ஏப்.3

மன்னார் பொலீஸ் நிலையத் தங்கும் விடுதியிலிருந்து ரி.56 ரகத் துப்பாக்கியைத் திருடியவர் என்று கூறப்படும் நபர் ஒருவர் குருநாகலில் வைத்துப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கியைக் களவாடிய இந்த நபர் பொலீஸ் சீருடையில் வந்து குருநாகலில் உள்ள தனக்கு அறிமுகமான கடையொன்றில் தனது பிரயாணப்பையை வைத்துவிட்டுச் சென்றார் பிரயாணப்பை தொடர்பாகச் சந்தேகம் கொண்ட கடை உரிமையாளர் அதனைச்சோதனை செய்தபோது அதற்குள் துப்பாக்கி இருப்பது தெரியவந்தது. இது தொடர்பாகப் பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு சென்ற பொலீஸார் குறித்த நபரைக் கைதுசெய்தனர்.

தனது குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவு காரணமாக மனைவியைக் கொலை செய்யவே துப்பாக்கியைத் திருடினேன் என்று கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தம்மிடம் தெரிவித்தார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

மேற்படி நபர் முன்னாள் ரிசேவ் பொலீஸ் உத்தியோகத்தர் எனக் கூறப்படுகிறது. (ஒ-8)

### பஞ்சரதம் வருகுதய்யா

*பஞ்சரதம் வருகுதய்யா வண்ணை நல்லூர் வீதியிலே*
*ஆனைமுகன் ஏறிவரும் அழகரதம் முன்னேவரும்*
*வாலாம்பிகை அம்மைதேரை பெண்ணடியார் தொட்டிழுப்பர்*
*வேலவரின் அருகினிலே வள்ளிதெய்வ யானைவர*
*வைத்தீசர் அம்மையுடன் ஆனந்தமாய் வலம்வருவார்*
*பஞ்சரதம் நகருமிடம் தர்மமது பூத்திருக்கும்*
*தூய வண்ணை வீதியிலே அடியார் குழாம் சூழ்ந்திருக்க*
*எண்ணமுடன் தொட்டிழுத்து இடம்பிடிப்போம் முத்தியிலேயே.*

- கவிமணி கந்த முருகேசதாசனார்

(இன்று வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் இரதோற்சவம்)

## சமய சந்நிதிகளில்

வட்டுக்கோட்டை,ஏப்.3

வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகிப் பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 12ஆம் திகதி பங்குனித்திங்கள் அன்று தீர்த்த உற்சவம் இடம்பெறும். (ஒ-161)

★ ★ ★

குடத்தனை,ஏப்.3

பருத்தித்துறை, தொப்பனாவத்தை வைரவர் ஆலயப் பங்குனி உத்தரத் திருவிழா இன்று ஆரம்பமாகவுள்ளது.

இரவு 9 மணிக்கு வளர்ந்துப்பூஜை நடைபெற்று நாளை விசேட பூஜைகளும், அன்னதானமும் இடம்பெறும். (ஒ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம் வண்ணை - கலட்டி ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளைமறுதினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (ஒ-ரி)

★ ★ ★

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீசிவகாமி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து 11 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. (ஒ-ரி)

## தடகளப் போட்டிகள்

தென்மராட்சி,ஏப்.3

தென்மராட்சிப் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும்.

இந்த விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான விளையாட்டுக்கழக நிர்வாகிகளுக்கான கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி பிரதேச செயலகத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.3

தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் இரசாயனவியல் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை யாழ்மத்தியகல்லூரியில் காலை 8.30 மணிக்கு இடம்பெற உள்ளது.

இதில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் இரசாயனவியல் கற்பிக்கும் ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளும்படி தொண்டமனாறு வெளிக்கள நிலையம் கேட்டுள்ளது. (ஒ)

## புதன்தோறும் சமுர்த்தி அலுவலர் அலுவலகங்களில் பணி

கொடிகாமம்,ஏப்.3

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 60 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் தத்தமது பிரிவுகளில் உள்ள சமுர்த்தி அலுவலகத்தில் கடமையில் ஈடுபடுவார்கள் எனத் தென்மராட்சிப்பிரதேச செயலரால் சமுர்த்தி வலயங்களிற்கு அனுப்பப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ-74)

## கச்சதீவில் இம்முறை பக்தர்கள் குறைவு

நெடுந்தீவு,ஏப்.3

கச்சதீவு உற்சவத்திற்கு இம்முறை குறைந்த எண்ணிக்கையான பக்தர்களே கலந்துகொண்டுள்ளனர்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை திருவிழாத் திருப்பலியுடன் நிறைவுற்றது.

முதல்நாள் திங்கட்கிழமை மாலை கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகியது. கடந்த வருடங்களைக் காட்டிலும் இம்முறை குறைந்த அளவிலான பக்தர்களே திருவிழாவில் கலந்துகொண்டனர்.

இந்தியாவின் பாம்பன் பிரதேச பங்குத்தந்தை அருட்திரு.அமல்ராஜ் தலைமையில் இடம்பெற்ற திருப்பலி ஒப்புக்கொடுத்தலில் இலங்கை, இந்திய குருமார்கள் பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல சுசில் சந்திரபால மற்றும் இராணுவ, கடற்படை உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ஒ-10-ரி)

## தேர் உற்சவம்



வட்டுக்கோட்டை, சங்கரத்தைப் பிட்டியம்பதி
வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள்

### தேர் உற்சவம்

நாளை (04.04.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.
நண்பகல் 12.00 மணியளவில் வசந்தமண்டபப் பூசை நடைபெற்று,
பி.ப. 2.00 மணியளவில் அம்பாள் தேரில் எழுந்தருளி
அடியார்களுக்குக் காட்சி கொடுத்தருளுவார்.
05.04.2004 திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும்.
அடியார்கள் அனைவரும் வந்து அம்பாளைத்
தரிசித்து இஷ்ட சித்திகளைப்
பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

விளம்பர அன்பளிப்பு: முருகன் பேக்கரி
(தரமான பாண், பனிஸ், கேக் வகைகள், கறி பனிஸ் தயாரிப்பாளர்கள்)
ஸ்ரீஸ்ரோர்ஸ்
துணவி, வட்டுக்கோட்டை.
(30396) முகவர்: 376, உதயன், சஞ்சீவி விற்பனையாளர். (24-21-17-13)

## பொருளியற் கல்லூரி

பெருமாள் கோவில் அருகில்,
நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

இணுவில் மத்திய கல்லூரி
அருகில்;
கே.கே.எஸ். றோட்,
இணுவில்.

A/L 2006

புதிய பிரிவுகள்

கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்: நாளை (04.04.2004) ஞாயிறு

| A/L 2006 | யாழ்நகர் | இணுவில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளீ | முரளீ |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P.சர்மா | R.P.சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் |
| நாடக -அரங். | சுகந்தன் | சுதன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| அரசியல் | றஜீவன் | றஜீவன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

யாழ் நகரில் : கலை - 9.00 a.m. / வர்த்தகம் 10.00 a.m.
இணுவிலில் : கலை - 9.00 a.m. / வர்த்தகம் 3.00 p.m.

(30420)(40-21-14-17)

## கேள்வி அறிவித்தல்

வீடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு
கட்டடங்கள் திணைக்களம்

1) தலைவர், கேள்விச்சபை, பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் அவர்கள் பருத்தித்துறையில் பிராந்திய செயலர் அலுவலகம் கட்டம் 1 இன் நிர்மாண வேலைகளுக்கான மூடிய கேள்விகளை 21.04.2004 அன்று மு.ப. 10.00 மணிவரை பெற்றுக்கொள்வார்.

2) பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் மீளப் பெறப்பட முடியாத கட்டணமாக ரூ.1000.00/-வை மட்டும் செலுத்தி 16.04.2004 அன்று பி.ப. 3.30 மணிவரை கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3) பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் கேள்விப்பத்திரங்கள் மூடப்பட்ட உடனும் திறக்கப்படும்.

4) இலங்கை தேசிய நிர்மாண ஒன்றியத்தில் அங்கத்துவத்தையும் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி கல்வி நிறுவகத்தில் தரம் M7 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்துகொண்ட ஒப்பந்தகாரர்களுக்கும் நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் பதிவு தரப்படுத்தலும் பற்றிய தேசிய திட்டத்தில் கட்டட நிர்மாண ஒப்பந்தகாரர்களாகப் பதிவு செய்து ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படுவதற்கு முன்னதாக ஒப்பந்தகாரர்கள் பதிவுப் புத்தகத்தையும் NCASL இன் அங்கத்துவ அட்டையையும் சமர்ப்பிக்கவேண்டும்.

5) மூடிய கேள்விப் பத்திரங்கள் தலைவர், கேள்விச்சபை, பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரைவீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பப்படலாம் அல்லது நேரில் கையளிக்கப்படலாம்.

6) கேள்விப் பத்திரங்கள் கட்டணங்கள் எதுவுமின்றிப் பரீட்சிக்கப்படும். மேலதிக விவரங்களைப் பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

W.S. மொல்லிகொட,
கட்டடங்கள் பிரதி இயக்குநர்,
கட்டடங்கள் திணைக்களம்,
"செத்சிரிபாய" சிறி ஜயவர்த்தன புர கோட்டே,
பத்தரமுல்ல.

(சி-34047)(21-14-17-40)

சிவமயம்
காளிதேவி துணை



பருத்தித்துறை - வியாபாரிமூலை - பழவத்தை

## அருள்மிகு ஸ்ரீகாளி அம்பாள் தேவஸ்தானம்

## தேர்த் திருவிழா

திருவருள் பொழியும் ஸ்ரீகாளி தாயே!
சித்திரத் தேரேறி வருக! வருக!

பருத்தியெம்பதி வியாபாரிமூலை பழவத்தையில்
பன்னெடுங்காலம் கிளுவை மரநிழலிலமர்ந்து
திருவருள் பொழியும் ஸ்ரீ காளியம்மாவே
சீர்மிகு கலைவளம் நிறைந்த சித்திரத் தேரேறி வருக!
ஆற்றாதமுத அருமந்த பிள்ளைக்கு
அமுதம் அளித்த தாயே!
நோற்றார் மனத்தில் நினைத்ததை எல்லாம்
நொடியில் அளிப்பவள் நீயே!
கூற்றாம் வறுமையைக் கொன்று செல்வத்தைக்
கொளிக்கச் செய்திடும் குயிலே!
மாற்றார் மனத்தின் மயக்கத்தை அறுத்து
மாற்றம் கொடுத்திடும் மயிலே தேரேறி வருக!
தார்மேவு மார்பன் சங்கரன் உடலில்
செம்பாதி தரித்த ஒளியே!
பார்மேவு இமயப் பனிமேவு மலையில்
பாங்காய் வளர்ந்த கிளியே!
நீர்மேவு நெடுங்கடலில் நீள்துயில் கொண்ட
நெடுமல் உடன்பிறந்த பின்னோய்!
சீர்மேவு தலங்கள் ஆறில் நின்றருளும்
செல்வக் குமரன் அன்னோய் சித்திரத் தேரேறி வருக!
பங்கயத்தாள் நோக பகலிரவாய் நின்று
பரவு வோர்க்கு நல்லருள் புரிவாய்
மங்கையர் உனை வேண்ட பொங்கிடும் பொலிவுடன்
மனையெலாம் சிறந்திட அருள்வாய்
சிங்கத்தின் மீதமர்ந்து தெருவலம் நீவந்து
தீமைகள் அனைத்தையும் கொய்வாய்
சங்குகள் எறிகின்ற பருத்தி கடலருகமர்ந்து
சங்கடம் தீர்க்கின்ற தாயே
சித்திரத் தேரேறி வருக.

- சுப மங்களம்-

கவிமாமணி, மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன் B.A.(Hons)
(ஆசிரியர், யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்)

அறங்காவலர்
பொ.சின்னையா

காளி அம்பாளின் அருள்ஆசி வேண்டிப் பிரார்த்திக்கும்:

யோகாஸ் கிறீம் ஹவுஸ்
கந்தமுருகேசனார் சிலையடி, மந்திகை, புலோலி.

(C/34016)(34-31-14-1)

31 வருடங்களாகப்
பெரும் பெறுபேறுகளுக்கு
உறுதுணையான நிறுவனத்தில்

O/L DAY CLASS
பகல்நேர வகுப்பு
(காலை 8.30- பி.ப 1.15)

ஏப்ரல் 05இல் ஆரம்பம்

☆ அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
☆ மேலதிக சிறப்புமிக்க ஆசான்களும் இவ்வருடம் இணைகிறார்கள்.
☆ மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அதிபர்

The Express Institute
Irupalai, Kopay.

(30380)(21-13-17-40)

## 45 ஆவது அகவையில் ஈரவிழிகளுடன் 7 ஆம் மாத நினைவஞ்சலி



| பூவுலகப் பிரவேசம் | விண்ணுலகப் பிரவேசம் |
|---|---|
| 03 | 03 |
| 04 | 09 |
| 1959 | 2003 |

### அமரர் வைத்திலிங்கம் ஜெகதீஸ்வரன்

மாதம் ஏழு போனதப்பா - நாங்கள்
மனங்கலங்கி தவிக்கின்றோமே!
மழலைகள் இங்கு கலங்குதப்பா!
மனதில் என்றும் கவலை அப்பா!
பதைபதைத்து நாம் கதற - எங்களைப்
பார்க்காமல் போனதேன் அப்பா?
எம் உயிர் உள்ளவரை - நாங்கள்
சிறகொடிந்த பறவைகள் அப்பா!
இதயத்தில் இருத்தி வைத்தே - நாம்
உங்களைத்தினமும் பூஜித்தே வாழ்வோம் அப்பா!

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்பு மனைவி, பிள்ளைகள்.


374, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(30330) (37-21-11-17)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில்

09 - 01 - 1930



விண்ணுலகில்

16 - 03 - 2003

## அமரர்
## பாலசுப்பிரமணியம் பிரதீபன்

அன்புக்கோர் அணிகலனாய் ஆதரவு காட்டி
பண்புக்கோர் இருப்பிடமாய் பாசம் காட்டி
எங்களுடன் வாழ்ந்து இன்னுயிர் பிரிந்து
ஓராண்டு ஓடி மறைந்து போனாலும்
உங்கள் அன்பு உருவம் ஒருபோதும்
எங்கள் உள்ளத்தை விட்டு அகலாது!
எங்கும் எப்போதும் என்றும் உங்கள்
திருமுகம் கண்முன்னே தெரிகின்றதே!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.


- அன்புடன் -
பா.பிரகாந் (தம்பி).

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

(30318) (24-11-13)

உ
சிவமயம்







# யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீமத் வாலாம்பி...

# தேர்த்திருவிழாச் சிறப்பு...

## ஆதீன முதல்வரின் அருளாசி



யாழ். வண்ணை ஸ்ரீமத் வலாம்பிகா சமேக ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தின் இன்றைய தேர்த்திருவிழா நாளில் கரங் கூப்பிச் சிரந்தாழ்த்திப் போற்றித் துதிக்கும் அடியார் பெருமக்கள் அமைதியும் சுபீட்சமும் பெற்று மகிழ்ச்சியோடிணைந்த மங்கள வாழ்வு வாழவேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

மஹோற்சவத்தில் ரதோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். ஆகவே, கொலை பாதகச் செயல்கள், குற்றச் செயல்கள், வன்முறைகள், தீச்செயல்கள் அனைத்தும் அழிந்தொழிய வேண்டும். பஞ்சமாபாதகங்கள் பாரில் இல்லாதொழியவேண்டும். இன்றைய பஞ்சரதப் பவனி காண வருகின்ற பக்தர் குழாம் பரமனின் பெருங்கருணைத் திருவருளுக்குப் பாத்திரமாகி வாழ்வில் வளம் பெருகி நல்வாழ்வு வாழவேண்டுமென்று ஆசிகூறிப் பிரார்த்திக்கின்றோம்.

ஈழம்வாழ்மக்கள் அனைவரும் இனிமேலாவது சமாதானமடைந்து சண்டை சச்சரவு நீங்கிச் சந்தோஷமாக வாழ நல்லைக்குருமணியின் பாதம் பணிந்து வணங்கி அமைகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
இரண்டாவது குரமஹாசந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்த ஆதீனம்.



# தஞ்சமென்று வந்தோரின்...
# பஞ்சரதப் பவனிகாணக்...

யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயம் சரித்திரப் பிரசித்திபெற்ற புராதன சிவாலயமாகும். யாழ்ப்பாணத்தின் நகர மத்தி... சிறந்த சிவஸ்தலமாக மிளிருவதுடன், அடியார்களின் நோய் தீர்க்கும் புனிதம் நிறைந்த இடமாகவும் விளங்குகின்றது.

### கண்கொள்ளாக்...

தம்மை வழிபடும் அடியார்களின் துன்பங்களையும் துயரங்களையும் போக்கும் சிவபெருமான் இந்த ஆலயத்... வைத்... வருங்காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். அடியார்கள் அனைவரும் "அரோகரா" கோஷத்துடன் முண்டியத்துக் கொண்டு ... வடம் ...

யாழ். வைத்தீஸ்வரன் கோயில் கொடியேறிவிட்டாலே யாழ்ப்பாண நகர மக்களுக்குக் கொண்டாட்டந்தான். விழாக்கோல... அலங்கரிக்கப்பட்ட நகரமாக யாழ். நகர் காட்சியளிக்கும். எங்கு பார்த்தாலும் பக்திக் கீதங்கள் ஒலித்தவண்ணமிருக்கும். வீதிகளி...

### பக்திமணங்கமழும்...

ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் அலங்காரத்தில் சுவாமி திருவீதி உலாவருங்காட்சி பார்ப்பதற்கு ரம்மியமாக இருக்கும். பக்திம... தெய்வீகத்தை உருவாக்கிவிடுகின்றன.

### பிறவிப் பிணி தீ...

மனிதர்களாகிய நாம், எமது உடம்புக்கு நோய் வந்தபோது, வைத்தியரை அணுகி, நோயைப் பற்றிய தாக்கங்களைக் கூறி சி... நோயைத் திரும்பவும் வராமல் நம்மைப் பாதுகாத்துக்கொள்கின்றோம்.

அதேபோலவே, எமது உயிருக்கு வரும் பிறவிப் பிணி என்கின்ற பொல்லாத வருத்தத்தைப் போக்குவதற்கு வைத்தியர்.

தம்மை வழிபடும் அடியார்களின் துன்பங்களையும் துயரங்களையும் இன்னல்களையும் இடுக்கண்களையும் கொண்டெழுந்தருளி வீற்றிருந்தருள் புரிகின்றான்.

சிவநெறிக் கலாநி...
இராசையா ஸ்ரீதர...

### கிடைத்தற்கரிய...

மானிடப் பிறவி ஓர் அரிய பிறவி. கிடைத்தற்கரிய இந்தப் பிறவி எமக்குக் கிடைத்தது பூர்வஜென்மத்தில் நாம் செய்த புண்ணி... அதன் பெருமையை உணர்ந்து நடத்தல்வேண்டும்.

அதற்கு ஒரே வழி பரங்கருணைத் தடங்கடலாகிய எம் பெருமான் வைத்தீஸ்வரனை வணங்கிப் போற்றிப் பாடிப் பணிதலா... நன்னாளில் பூஜித்து வணங்கி மகிழ்வோம். எம்பெருமான் ஆரோகணித்துவரும் பஞ்சரதப் பவனி பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத...

இந்த யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் திருக்கோயில் வருடந்தோறும் பங்குனி உத்தர நன்னாளைத் தீர்த்தத் திருநாள்... விநாயகப் பெருமானும் அடுத்த மூன்று நாள்களிலும் ஸ்ரீவள்ளிதேவசேனா சமேத சுப்பிரமணியப் பெருமானும் அருளை அள்... சந்திரசேகரப் பட்டமளிப்பும் இடம்பெறும். இது அன்றுமுதல் இன்றுவரை நடைபெற்று வருதல் மரபு.

### ஆயத்தமில்...

வைத்திலிங்கச் செட்டியார் மரபில் வந்த குடும்பத்தினரே இப்போதும் தர்மகர்த்தாவாக இருந்து இந்த ஆலயத்தைச் செவ்வ... ஆறுமுகநாவலர் பெருமான் கதாப்பிரசங்கம் செய்தார் என்று வரலாறு கூறுகிறது. முதலில் பிரசங்கத்துக்கு அவரை அழைத்தபோ... நாம் மரணத்துக்கு ஆயத்தமில்லை" என்று உரையாற்றி முடித்த நாவலர் பெருமான் சைவத்தையும் தமிழையும் காப்பாற்றும் நே... பெருமையும் இந்தச் சிவன் ஆலயத்துக்கு உரித்தானது என்று கூறின் சாலப்பொருந்தும். ஆகவே, அத்தகைய சிவன் கோயிலி... வாழ நம்மை நாமே தயார்ப்படுத்தி ஆன்மீக வாழ்வுக்கு அடிகோலுவோமாக.

## தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:


அசல் 22 கரட் அழகிய தங்கப் பவுண் நகைகளுக்கு சிறந்த இடம்:
**சாரங்கா நகைமாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 26972, 021 222 2480
(C/33882)

நவநாகரிக நங்கையர்கள் நாடும் இடம்:
**பிரணகா நகைத் தொழிலகம்**
ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை.
68/A, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
(C/33881)

அழகுசாதனங்கள், விளையாட்டுப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள் விற்பனையாளர்:
**லக்ஷ்மணா சென்ரர்**
இல.381, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(C/34108)

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு தவறாமல் நாடுங்கள்:
**சுவிஸ்ஸோ நகைத் தொழிலகம்**
44/1, யாழ். வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0777 917579, 0777 917578
(C/33883)

நவீன தங்கப்பவுண் நகைகளுக்குச் சிறந்த இடம்:
**நியூ நகுலா ஜுவல்லறி**
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 5511
(C/33886)

புதிய நவீன டிசைன்களிலான தங்க நகைகளுக்குச் சிறந்த ஸ்தாபனம்:
**நியூ நிறைஞ்சனாஸ் நகை மாளிகை**
83/1, கஸ்தூரியார் வீதி, செம்மாதெரு, யாழ்ப்பாணம்.
☎ 071 2270458, 077 607 0679.
(C/33888)

சிறந்த அழகிய தங்க நகைகளுக்கு நம்பிக்கையுடன் நாடுங்கள்:
**துர்க்கா நகைப் பூங்கா**
71, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 2228.
(C/33891)

உங்களுக்குத் தேவையான மருந்துவகைகளைப் பெற்றுக்கொள்ளச் சிறந்த இடம்:
**பிரபா பார்மஸி**
இல.315, ஸ்ரான்லி வீதி (நாகவிகாரையடி), ஆரியகுளம் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம்.
(C/33892)

தரமான பாடல் பதிவுகளுக்கு சிறந்த இடம்:
**மார்க்கோணி** மியூசிக் சென்ரர் எலக்ரோணிக்ஸ்
இல.292, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(C/33876)

தரமான பொருள்களுக்குத் தவறாமல் நாடுங்கள்:
**முத்து விநாயகர் பல்பொருள் வாணிபம்,**
இல.418, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
☎ 021 222 6126
(C/33875)

**மற்றா தளபாட நிலையம்**
(குசன் செற்றிகள் திருத்தி மீள்குசன் அமைத்துக் கொடுப்பவர்கள்)
இல.395 (233), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(C/33862)

தங்க நகைகளுக்கு தரம்மிக்கோர் தவறாமல் நாடுமிடம்:
**பொ.அம்பலவாணர் நகை மாளிகை**
(மிகப் பழைமை வாய்ந்த நம்பிக்கையான ஸ்தாபனம்)
இல.119, கஸ்தூரியார் வீதி, யாழ்.
T.P.:2264
(C/33861)

**டாட் என்ரப் பிறைஸ்**
(அன்பளிப்பு, அழகுசாதன, இலத்திரனியல் பொருள்கள் விற்பனையாளர்)
இல.11,12, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம். T.P.:3098, 7622. (C/33873)
பிரத்தியேகக் காட்சியறை
இல.2, நவீன சந்தை (மேல்மாடி) மக்கள் வங்கி அருகில், யாழ்ப்பாணம்.

HERO HONDA World No.1
RG இரத்தினகோபால்ஸ்
65, 63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
0777 – 340056, 021 222 6185
(C/33868)

ஸ்கிரீன் பிறின்ரிங், ஓவ்செற் பிறின்ரிங், பிளாஸ்ரிக் போட், திருமண அழைப்பிதழ், கீரெக், துணி பிறின்ரிங்
நவீன முறையில், புதிய பாணியில், அழகு வடிவத்தில் வடிவமைத்துக்கொள்ள நாடுங்கள்:
**தாரணி பதிப்பகம் & ஆட்ஸ்**
இல. 319, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (மனோகரா தியேட்டருக்கு அருகில்).
கிளை: பொன்னாலை வீதி, மானிப்பாய். பதிப்பு வேலைகளில் தரணி புகழ் ஸ்தாபனம் தாரணி பதிப்பகம்.

எழிலுறு தரமான அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்:
**சிறிமதனா நகை மாளிகை**
155/M, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 7772, 0777 300185
**மதனா ஜுவல்...**
177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்...
☎ 021 222 5526
(C/33868)

(C/34107)

**சிவன் மோட்டார் ஸ்ரோர்ஸ்**
**SIVAN MOTOR STORES**
70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 2763
(C/33863)


கண்ணாடி வகைகள், அலுமினியத் தகடு வ... போர்மிகா சீட் வகைகள், பூ... நிலவிரிப்பு வகைகள் முதலியவற்றைப் ...
**ஜெசீமா பிக்ச...**
302, 304, 308, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பா...

உ
...வமயம்

# ...ம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வரன் கோயில்







# ...ப்புமலர் - 03.04.2004



## வேதனைகள் தீர்த்திடுவாய்!

வண்ணையம்பதியுறையும் வைத்தீஸ்வரனே வாவா
வாலாம்பிகை நாயகரே வரமருளும் ஈஸ்வரனே!
கண்ணையிமை காப்பதுபோல் காத்தருள் புரியும்
கணபதியின் தந்தையே! கந்தனின் பிதாவே!
பெண்ணையிடப் பாகம் வைத்த பெருமானே சிவனே!
வேதனைகள் தீர்த்திடுவாய் வேண்டியே துதிக்கின்றோம்!
மண்ணையுண்ட வாயான் மாயோனின் கழல் போற்றியென்றே
வணங்கியே போற்றுகிறோம் வரந்தனைத் தாராய்!
- திருவரன் -

## தேரேறி வந்தே வினைதீர்ப்பாய் ஐயா!

வந்தனை செய்தோம் வரமருள்வாய் ஈஸ்வரனே
வந்தே வலம் வந்தோம் காத்தருள்வாய் ஐயா!
சிந்தனையிலுனையிருத்திச் சிரந்தாழ்த்திப் பணிந்தோம்
தேரேறி வந்தே கொடிய வினை தீர்ப்பாய்!
உந்தனை நம்பியே ஓடி வந்தோம் சிவனே!
உமையம்மைபாகரே ஓங்கார நாதரே
கந்தனையும் கணபதியையும் உலகுக்கே தந்திட்ட
வைத்தீஸ்வரநாதரே வரமருள வாருமையா!
- சிவபக்தன் -

# ...ின் வல்வினை போக்கும் ...க் கண் கோடி வேண்டும்!

... நகர மத்தியிலே நடுநாயகமாக அழகிய இராஜகோபுரத்துடன் வீற்றிருக்கும் இந்த ஆலயம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த

### ...ள்ளாக்காட்சி

... வைத்தீ...ரனாக எழுந்தருளி இன்று தையல்நாயகி அம்மையோடு ஸ்ரீமத் வாலாம்பிகா சமேதராக பஞ்சரதப் பவனி ...வடம் பி... இழுத்துவரும் கோலாகலக்காட்சி காணக் கண் கோடி வேண்டும்; காண்பதற்குக் கொடுத்துவைத்திருக்கவேண்டும். ...ிழாக்கோலம் பூண்டு மகரதோரணங்களுடன் வாழை, கமுகு கட்டப்பட்டு மாவிலைகளாலும் வண்ணமலர் மாலைகளாலும் ...ம். வீதிகளின் நாலு புறமும் நன்கு அலங்காரஞ் செய்யப்பட்டுப் பார்ப்போர் மனதில் தெய்வீக உணர்வலைகளை ஏற்படுத்தும்.

### ...கமழும் திருவிழா

...ம். பக்திமணங்கமழும் பஜனைக் கோஷ்டிகளும் கூட்டுப்பிரார்த்தனைகளும் ஆன்மீக உணர்வைத் தட்டி எழுப்பி உள்ளத்தில்

### ...ிணி தீர்ப்பவர்

...க் கூறி சிகிச்சை பெற்று வருத்தத்தைக் குணப்படுத்துகின்றோம். அவர் தருகின்ற மருந்துகளை நேரந்தவறாமல் உட்கொண்டு

...றிக் கலாநிதி
...சயா ஸ்ரீதரன்

எல்லாம்வல்ல பரம்பொருளாக விளங்குகின்ற வைத்தீஸ்வரப் பெருமானே வல்லவராவர். அவர்தான் சிறந்த

நீக்கியருள்கின்ற வைத்தியநாதராக விளங்குகின்ற சிவபெருமான் வண்ணையம்பதியிலே கோயில்

### ...ற்கரிய பிறவி

...த புண்ணியப் பலனாகும். ஆகவே, புனிதப் பிறவியான மனிதப் பிறவி எடுத்த நாங்கள் அதன் பயனை, அதன் அருமையை,

... பணிதலாகும். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த இறைவனை இன்றைய தேர்த்திருவிழா ...தவிட்டாத ஓர் அரிய காட்சியாகும்.

... திருநாளாகக் கொண்டு மஹோற்சவம் நடைபெறுகிறது. இத்திருவிழா நாளில் முதல் மூன்று நாள்களிலும் விக்கினந் தீர்க்கும் ...ளை அள்ளிச் சொரிந்து திருவீதியுலா வருவர். பின்பு நால்வர் பெருமக்களும் உலா வந்து பத்தாம் நாள் காட்சி கொடுத்து

### ...ந்தமில்லை

... செவ்வனே வழிநடத்தி வருகின்றனர். ஆறு காலப் பூசையும் நியமந் தவறாமல் நிகழ்கின்ற இந்த ஆலயத்தில்தான் ஸ்ரீலஸ்ரீ ...ழைத்தபோது 'ஆயத்தமில்லை' என்றாலும் பின்பு எல்லோரும் கதாப்பிரசங்கத்தைச் செய்யுமாறு வற்புறுத்தவே, "ஆயத்தமில்லை ...ற்றும் நோக்குடன் தம்மையே முற்றுமுழுதாகச் சைவப்பணிக்கு அர்ப்பணித்து வாழ்ந்ததாகச் சரித்திரம் கூறுகிறது. இத்துணை ... கோயிலிலே திருவிழா நாள்களில் எம்பெருமானைத் தரிசித்து இப்பூவுலகில் சதுர்வித புருஷார்த்தங்களை அடைந்து நல்வாழ்வு


நவ நாகரிகமணிகள் நம்பிக்கையுடன் நாடுமிடம்:
நிஷானந்தா ஜுவல்லறி
75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0777 732702.
(C/33880)

மூலிகைகளாலான மருந்து வகைகளுக்கும் எண்ணெய் வகைகளுக்கும் மற்றும் பொருள்களுக்கும் நாடுங்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021-222 2567
(C/33879)

உத்தரவாதம் மிக்க நவீன அழகிய தங்கப்பவுண் நகைகளுக்குச் சிறந்த ஸ்தாபனம்:
சிறி சிவாஞ்சனா நகையகம்
149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 2225481
(C/33884)

நவீன பாணியிலமைந்த தங்க நகைகளுக்கு நாடுங்கள்:
செல்வி நகை அகம்
1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/33885)

உங்களுக்கேற்ற அழகிய மூக்குக் கண்ணாடிகளுக்கும் நீங்கள் கட்டிக்கொள்ள முத்துப்போன்ற வெண் பற்களுக்கும் சிறந்த ஸ்தாபனம்:
THUSHA
Opticians & Dental Works,
544, Hospital Rd., Jaffna.
☎ 021 222 3461.
(C/33890)

சிறந்த நவீன வடிவமைப்பிலான மூக்குக் கண்ணாடி வகைகளுக்கு நாடுங்கள்:
எரிக்கணேஸ்
Eric Ganesh Opticians
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 2486.
(C/33889)

தரமான பொருள்களுக்கு தவறாமல் நாடுங்கள்:
VENE STORES
Wholsale and Retail Dealers
165, K.K.S. Rd., Jaffna.
☎ 022 2661, 022 2046
(C/33878)

உங்கள் கடைச்சல் வேலைகளைச் சிறந்தமுறையில் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்:
யாழ். வைரவி கடைச்சல் தொழிலகம்
(உரிமையாளர்: V.ரூபன்)
சிவன் கோயிலடி.
445, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
(C/33877)

அன்பளிப்புப் பொருள்களுக்கு அதிசிறந்த இடம்:
கணேசா மல்ரி பலஸ்
357, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 7599.
(C/33860)

JASO (PVT) Ltd.
35, Kannathiddy Road, Jaffna.
☎ 0777 110610.
(C/33859)

ருசிமிக்க உணவு வகைகளுக்குச் சிறந்த இடம்:
ஸ்ரீ வாணி விலாஸ் (சைவ உணவகம்)
இல.372, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 071 - 2370211
இல.144, கண்டி வீதி, வவுனியா. 024 - 4589777.
(C/33874)

சுகாதார முறைப்படி நாவினிக்கும் வகையில் தரமான, சுவையான பண்டங்களைத் தயாரித்து என்றென்றும் தந்திடும்
லிங்கன் கிறீம் ஹவுஸ்
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/34107)

அழகுக்கு அழகுதரும் நவநாகரிக ஆடைகளுக்கு நம்பகமான ஸ்தாபனம்:
காவேரி சில்க்ஸ்
இல. 46. பெரியகடை, யாழ்ப்பாணம். ☎ 222 2333.
அழகுமிக்க காவேரிக்கு விஜயஞ்செய்யுங்கள்!
(C/33868)

...கள்:
...வல்லறி
... யாழ்ப்பாணம்.
...5526

புடைவைத் திலுசுகள், கூறைச் சேலைகள், பஞ்சாபி, ஸ்கேட் அன் பிளவுஸ், சேட்டிங் சூட்டிங், T.சேட், டெனிம் ஜீன்ஸ், சேட் (ரெடிமேட்) மற்றும் அனைத்து வகையான ஆடைத் தெரிவுகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்:
சிவா ரெக்ஸ்ரைல்ஸ்
இல. 27. பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(C/33867)

பலசரக்கு மற்றும் மிக்ஷர் தயாரிக்கும் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறுவதற்கு:
ஜெகன் களஞ்சியம்
இல.285, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். ☎ 222 5035
(C/33865)


...தகடு வகைகள், ஒட்டுப் பலகை வகைகள், ...கைகள், பூட்டு வகைகள், ...வற்றைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:
...பிக்சர் பலஸ்
... யாழ்ப்பாணம். ☎ 021 222 3124.
(C/33871)

யமஹா பிளாஸா
298, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 4590 200.
(C/33870)

V.S.P.
நல்ல தரமான ஸ்பெஷல் நல்லெண்ணெய் விற்பனையாளர்
பரிமளா ஸ்ரோர்ஸ்
2f A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(C/33869) (24-11-12)

KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS

KINGS ELECTRONICS



60W, 70W, 120W, 150W
Pioneer Speaker Boxes,
Equalizers & Audio Deck,
Amplifiers.
(Made In Japan)
விற்பனைக்கு உண்டு.



Computers, T.V, Tamil Audio Cd, Video Cd, Empty Cds, VHS டெக், DVD Player, Table Fan, Chapathi Maker, Rice Cooker, மற்றும் சகலவிதமான எலக்ரோனிக் பொருட்களுக்கும் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.



கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்

இல 64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

எமது நிறுவனத்திற்கு வேறு கிளைகள் இல்லை.

KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS

**MATHS CENTRE**
M.M.V. Road, Nelliady
புதிய பிரிவு கலை வர்த்தக
A/L 2006 வகுப்புக்கள்
ஆரம்பம் 05.04.2004
நேரம் பி.ப. 3.00
(ப.நே.) திங்கள்
வழமையான ஆசிரியர் குழு

தரம் 4 - தரம் 11 வரையிலான இரண்டாம் தவணைக்கான வகுப்புக்கள்
ஆரம்பம் - 05-04-2004
(திங்கள்)
நேரம் பி.ப 3.30 (ப.நே.)
(C/34201)(40-21-13-11)

**O/L DAY CLASS**
பிரிவு I ஆரம்பம்
05.04.2004
திங்கள் காலை 8.30 (மு.நே.)
★ மாதம் 40 மணித்தியாலம் கணித வகுப்பு நடைபெறும்.
★ கடந்த வருட பரீட்சையில் 90 சதவீத மாணவர்களை சித்தியடைய வைத்த ஒரே நிறுவனம்
நாவலர்
ஆனைப்பந்தி.
யாழ்ப்பாணம்
(30406) (40-21-13-11)

**BITSMANS**
கல்வி நிறுவனம். மானிப்பாய்.
A/L 2006
கணித உயிரியல் வகுப்புக்கள்
* பௌதிகம் - திரு.ஜெயசீலன்
* இரசாயனம் - திரு.N.மகேஸ்வரன்
* இணைந்த கணிதம் - திரு.பிரதீபன்
* உயிரியல் - திரு.ஞானேந்திரன், - திரு.தயாபரன்
ஆரம்பம்:-04.04.2004 ஞாயிறு 4.30p.m.
ஆரம்பம்:
O/L DAY CLASS
05.04.2004 திங்கள்
காலை 8.00 (C/34223)

## தொண்டர் சபை நிர்வாகிகள் தெரிவு

குடத்தனை,ஏப்.3

யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான 2004ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகசபை அண்மையில் தெரிவுசெய்யப்பட்டது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் நிர்வாகிகள தெரிவு செய்யப்பட்டனர்.

நீங்காத நினைவாக 6 ஆம் மாத நினைவு அஞ்சலிப்பா
03.04.2004

தோற்றம் 06 - 08 - 1931



மறைவு 07 - 10 - 2003

### மகாவித்துவான் ந.வீரமணிஐயர்.

செந்தமிழாற் சேர்ந்தியைந்த தெய்வமணி!
செய்பணியாற் பேறுபெற்ற ஞானமணி!
பைந்தமிழாற் பாவியற்றும் பக்திமணி!
பாரறியப் போற்றிடும் நல்வீரமணி!
நைந்த உடற்சுகமளிக்கும் நல்லமணி!
நாளும் வழிபாடியற்றும் சைவமணி!
சொந்தமெலாம் அனுசரித்து வாழ்ந்தமணி!
சொர்க்க உலகினுக்கோரதிதி ஆனமணி!

செய்பணியாற் தமிழ் வாழச் செய்தமணி!
செயற்கரிய செய்கை பல கண்டமணி!
உய்வகைகள் பலவற்றை உதிர்த்தமணி!
உத்தமநன் மேற்குணங்கள் வாய்த்தமணி!
பையரவம் பூண்டசிவன் பாடுமணி!
பார்ப்பவர் முன் ஏறேனவே நடந்தமணி!
கையடக்கப் பொடிப்பேழை கொண்டமணி!
கவியரசர் மகாவித்துவ வீரமணி!

பாரறியப் புகழ் நிறுவி நின்றமணி!
பக்தர்களின் மனங்களிலே வாழுமணி!
தேரிழுக்கும் ஆலயங்கள் ஊஞ்சல்மணி!
திக்கெட்டும் ஒலிக்கப் பாப்பாடும்மணி!
ஊரொலிக்கும் உலகொலிக்கும் நாமமணி!
உருகியென்றும் பாடப் பா யாத்தமணி!
காரெனவே கவிமழையைச் சிந்துமணி!
காணுவமோ! இனி நாமோர் வீரமணி!

அன்புக்கோர் வீரமணி அறிவுக்கோர் வீரமணி!
பண்புக்கோர் வீரமணி பாவுக்கோர் வீரமணி!
இன்புக்கோர் வீரமணி இதத்துக்கோர் வீரமணி!
நண்புக்கோர் வீரமணி நாடறிந்த வீரமணி!

ஆக்கம்:- வாகீச கலாநிதி
கனகசபாபதி நாகேஸ்வரன் M.A.

வீரகிருஷ்ணா வெளியீட்டகம்
இணுவில்.

திருமதி வீரமணிஐயர்

உ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 - 12 - 1938



மறைவு 14 - 04 - 2003

### அமரர் சரவணமுத்து விக்கினேஸ்வரன்

திதி: திரயோதசி 03.04.2004 சனிக்கிழமை

அகிலத்தை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று ஆனாலும்
எம்மை அன்பால் அரவணைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்களது உடல் மட்டும் எம்மைவிட்டு
அகன்றதே தவிர உள்ளமும் உருவமும்
எம்மிடந்தான் தொடர்ந்திருக்கும்.

இராஜ வீதி,
தோப்பு,
அச்சுவேலி.

(30356)(13-11-21)

உமது பிரிவால் வாடும் உள்ளங்கள்,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 13 - 05 - 1928



உதிர்வு 05 - 03 - 2004

### அமரர் மங்களம் விக்கினராசா

05. 03. 2004 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக கிருத்தியமும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் நாளை (04. 04. 2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும். எனறும் எமக்காகவே வாழ்ந்து இறுதிவரை தன் நிலைகுலையாது மற்றையோருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த எமது அன்புத் தெய்வம் நோய் வாய்ப்பட்டிருந்தபோது வருகைதந்து ஆறுதலளித்த உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தம்மால் இயன்ற மட்டும் இறுதிவரை வைத்தியசேவை புரிந்த வைத்தியர்களுக்கும், தாதியர்களுக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது அன்னையின் மீளாத்துயில் பற்றிய செய்தியறிந்து துயரத்துடன் ஓடி வந்து எமது துயரில் பங்குகொண்டதோடு, இறுதிக்கிரியைகளிலும், இறுதி யாத்திரையிலும் பங்குகொண்டவர்களுக்கும், தொலைபேசி, தந்தி மூலம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து எமது துயரைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் மலர் வளையங்கள், மலர்மாலைகள் வைத்து அஞ்சலிசெலுத்திய உறவினர்கள், இணுவில இந்துக் கல்லூரியினர், கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தினர் ஆகியோருக்கும் பத்திரிகைமூலமும் பிரசுரமூலமும் தனித்தனி கண்ணீர் அஞ்சலியும் செலுத்திய உடுவில் கோட்ட அதிபர்கள் சங்கம், இணுவில் இந்துக்கல்லூரி ஆசிரியர்கழகம் மற்றும் 2004, 2005 A/L மற்றும் 9B மாணவர்களுக்கும் எமது நெஞ்சம்நெகிழ்ந்த நன்றிகள் உரித்தாகுக.

30B, விதானையார் வீதி,
சுண்டிக்குளி.

(30309)(34-21-13-11)

வி.சச்சிதானந்தன் (அதிபர்)
குடும்பத்தினர் சார்பாக.

## நெஞ்சைவிட்டு அகலாத நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

31 ஆம் நாள் நினைவஞ்சலி





### கணேசமூர்த்தி தனலட்சுமிதேவி

தோற்றம் 1949.03.25

மறைவு 1999.04.12

### மயில்வாகனம் கணேசமூர்த்தி

தோற்றம் 1947.10.23

மறைவு 2004.03.04

அன்பின் இருப்பிடமாய் சிரிப்பின் ஒளிவிளக்காய்
இருந்த எம் தந்தையே!
பத்துமாதம் சுமந்து எம்மைப் பெற்றெடுத்த அன்னை
பல்லாண்டு காலம் வாழாது சென்றதுதான் ஏனோ?
அன்னை அரவணைப்பை இழந்த நாம்
உங்கள் அரவணைப்பில் வாழ்ந்திருந்தோம்
பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டி வளர்த்த அன்னை
பாரபட்சம் பாராது உங்களையும் உடன் அழைத்தாவோ?
ஆண்டுகள் பல சென்றாலும் என்றும் உங்கள் நினைவால்
நான்கு ஜீவன்கள் கலங்கிநிற்கும்.

எமது அப்பாவின் பிரிவுத்துயரில் நாம் இருந்தவேளையிலே நேரில்வந்து எமக்கு அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசிகள், தந்திகள் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் அத்தருணம் பலவகையிலும் எமக்கு உதவிபுரிந்த அயலவர்கள், நண்பர்கள், சகமாணவர்கள் மேலும் எமது தந்தை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்ற நாள்களில் அவருக்கு உதவிய வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் அனைவருக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (03. 04. 2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

- குடும்பத்தினர்.


இணுவில் மேற்கு, இணுவில்.


(30118)(34-13-11-21)


தகவல்: கோபி.

# தமிழ்த் தேசியம் முகமாலையில் பிரவகிப்பு
























முகமாலை கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

உ
அம்பாள் துணை

# இணுவில் சிவகாமி அம்மன் கோயில் தேர்த்திருவிழாச் சிறப்பு மலர்

03-04-2004





## பார்போற்றும் சிவகாமி அன்னைக்கு

### ஊர்கூடும் திருவிழா

### இன்றைய தேர்த்திருவிழா

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த திருவருட்சக்தி சிவகாமி அம்மை எனத் திருநாமங்கொண்டு அருளாட்சி புரியும் ஆலயம் இணுவில்பதிதன்னில் அமைந்துள்ளது. அம்பிகையின் அருட்கடாக்ஷத்தினால் கல்வியும் கலையும் கமழும் மேலோங்கி இக் கிராமம் சிறப்புற்று மக்கள் சீருடன் வாழ்ந்து வருகிறார்கள்.

அகிலலோக மாதாவான அன்னையின் ஆலயத்தில் ஆண்டுதோறும் பிரம்மோற்சவம், நவராத்திரி உற்சவம், ஸ்ரீசக்கரபூஜை, இலட்சநாம அர்ச்சனை, நவசக்தி அர்ச்சனை, தீபமஹாலக்ஷ்மி பூஜை போன்ற பல விழாக்கள் நடைபெற்று வருகின்றன. இதனால் மக்கள் அன்னையை நவசக்திநாயகி என்றும் ஸ்ரீசக்ரநிவாசினி என்றும் சிறப்பித்துப் போற்றி வழிபடுவர். இத்துணைச்சிறப்புப் பொருந்திய அன்னையின் சுபானுவருஷ மஹோற்சவம் இம்முறை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்று இன்று இரதோற்சவம் நடைபெறுகின்றது.

பஞ்சகிருத்தியங்களான சிருஷ்டி, ஸ்திதீ, ஸம்காரம், திரோபவம், அனுக்கிரகம் ஆகிய ஐந்தொழில்களின் மூலம் இவ்வுலக இயக்கத்தை ஆளுகின்ற பரம்பொருளின் வடிவான நடராஜ மூர்த்தத்தில் ஐந்தொழில்களும் அடங்கியிருப்பதை நாம் காண் கின்றோம். இம்மூர்த்தியின் சக்தியாக விளங்குகின்ற அன்னை சிவகாமி அம்மன் ஸம்காரத்திருவிழாவான இன்றைய தேர்த்திருவிழாவில் ஆன்மாக்கள் மீது கொண்ட அருட்கருணையினால் அனைத்து உயிர்களுக்கும் ஏற்படுகின்ற அல்லல்கள் அறுத்து அருள்வாழ்வு அளிக்கின்றவளாக சிறப்புற சிம்மானசத்தில் வீற்றிருக்கும் சிவகாமியை சிந்தையிலிருத்தி வாழ்த்துகின்றேன்.

பார்போற்றும் அன்னையின் பாதம் தொழும் பக்தரும் சீர் அன்னை சிவகாமியைச் சிந்தையால் தொடும் சீலரும் அடியளித்து அன்னையின் அடிதொழும் மாந்தரும், அன்னமிட்டு அனுதினமும் அகமகிழும் அன்பரும், பஜனையினால் அன்னை புகழ் பரப்பும் புனிதரும், ஊர்கூடித் தேர் இழுக்கும் இன்னடியார் கூட்டமும் முனிவரும் தேவரும் போற்றும் முக்கண்ணியாம் அன்னை சிவகாமி அம்பாளின் அருட்தரிசனத்தால் அஷ்டஐஸ்வர்யங்களும் பெற்று சிறப்புற்றுவாழ அன்னை சிவகாமி அம்பாளின் அருட் துணைகொண்டு ஆசிகூறி அமைகிறேன்.

லோகாசமஸ்தா சுகினோபவந்து

வேதசிவாகம கிரியாரத்தினம்
சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக்குருக்கள்
பிரதம குரு : சிவகாமி அம்மன் கோயில், இணுவில்.

தேரேறி வருகின்ற தேவியே சரணம்!
வந்தனை செய்தோம் தாயே வரமருள வேண்டும் நீயே!
வணங்கியே துதித்தோம் வளமான வாழ்வருள்வாய்!
உந்தனை நம்பியே ஓடோடி வந்தோம் அம்மா!
உன்பக்தர்களாம் எம்மைக் காத்திட வேண்டும் அம்மா!
கந்தனைப் பயந்த சிவகாமி அம்மையே காப்பாய்தாயே
தேரேறி வருகின்ற தேவியே சரணம் அம்மா!
சிந்தனையை உனக்காக்கினோம் சித்திரத் தேரேறியே
சிங்காரப் பவனி வரும் தாயே போற்றி போற்றி!

-அம்பிகை பதம் பணிவோன்-

## அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயாகியான அன்னை பராசக்தி தம்மை வழிபடும் அடியார்களின் துயர் போக்கி உயர் வாழ்வளிக்க வேண்டி இணுவில் பதியில் அமர்ந்து அருள்காட்சி நல்கி அருளை அள்ளி வழங்கிக்கொண்டிருக்கின்றார்.

அருள்புரியும் அன்னை

ஆதிபராசக்தியாக விளங்கும் அம்பிகையை உண்மையான அன்போடு பக்தி செய்து வழிபட்டால்அவளுடைய அருள் நிச்சயம் கிட்டும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை "பால் நினைந்தூட்டும் தாய்" எவ்வாறு குழந்தையின் பசி நேரமறிந்து அள்ளி அரவணைத்து, ஆதரித்து அன்புகாட்டிப் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கின்றாளோ அதே போல உலோக மாதாவாக விளங்குகின்ற சிவகாமி அம்பாளும் அடியார்களின் அல்லல் போக்கி அருள்புரிந்து காக்கின்றாள்.


இன்று வசந்தமண்டபபூஜை காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.
மஹோற்சவ பிரதமகுரு : "வேதசிவாகம கிரியாரத்தினம்" சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள்
இன்று மாலை
இன்னிசைத் திலகம் திரு.சி.சிவஞானராஜா (ஆசிரியர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)
அவர்களின் இன்னிசைக் கச்சேரி பக்கவாத்திய சகிதம் இடம்பெறும்.

கன்னியியல் கஸ்தூரி
K.K.S வீதி, இணுவில்
திளை: இல 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 2227643 (C/34054)

அம்பிகையே தேரேறி
வாருமம்மா!
FASHION HOUSE
பெஷன் ஹவுஸ்
65,K.K.S Road, Jaffna,
Phone : 2197
(C/34049)




சிமெந்து பெயின்ற் வகைகள் மற்றும்
கட்டட நிர்மாணப்
பொருட்கள் விற்பனையாளர்.
விநாயகர் ஹாட்வெயர்
(C/34052) K.K.S. Road, Inuvil.



GANESAN CENTRE
K.K.S Road, Inuvil
Dealers in Textiles and Fancy Goods
T.P 021 222 5708



அம்பிகையே சரணம்
அம்மா!
Gifts Selected From
AMBIKAI
அம்பிகை அழகுமாடம்
K.K.S Road, Inuvil.
(C/34051)



உலகை ஆளும் தாயே !
தேரேறி வருக!!
நவீன ரக ஆடை வகைகளின் சங்கமம்
சாந்தி புடைவையகம்
157,156, நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(C/34048)



# பதவிக்கு வரும் அரசுக்கு பல முனைகளில் நெருக்கடி

கொழும்பு,ஏப்.3

நாட்டில் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் நாடு பல்வேறு நெருககடிகளை எதிர்நோக்கும் சாத்தியங்கள் இருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

கடும் வரட்சி காரணமாகக் குடிதண்ணீர்ப் பிரச்சினை மற்றும் மின்வெட்டுப் பிரச்சினை, வேலை நிறுத்தப் பிரச்சினை என்பன ஏற்படும் சாத்தியங்கள் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. மேற்படி நெருக்கடிகள் நாட்டில் கடந்த சில மாதங்களுக்கு முன்னரே ஏற்பட்டிருந்தபோதிலும் தேர்தலில் இலாபம் தேடுவதை நோக்காகக் கொண்டு பிரதான கட்சிகள் அந்த நெருக்கடிகளைச் சமாளித்து வந்திருக்கின்றன எனவும் -

தற்போது தேர்தல் முடிவடைந்துவிட்டிருப்பதால் இந்த நெருக்கடிகள் சமாளிக்க முடியாத அளவுக்கு அதிகரிக்கக் கூடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

தேர்தல் பிரசாரக் கூட்டங்களின்போது மின்சாரம் விரயம் செய்யப்பட்டிருந்ததால் நாட்டின் முக்கிய பகுதிகளில் மின்வெட்டை அமுல்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தபோதிலும் அரசியல் லாபம் கருதி மின்வெட்டு எதுவும் அமுல்படுத்தப்படவில்லை என்று தெரியவந்திருக்கிறது.

எனவே, புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் மேற்படி விடயங்களில் பாரிய நெருக்கடிகள் ஏற்படக்கூடிய நிலை இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-4)

## நஞ்சூட்டி நாய்கள் அழிப்பு

வடமராட்சி,ஏப்.3

பருத்தித்துறை நகர்ப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டுள்ளன. பருத்தித்துறை நகரசபை சுகாதாரப் பிரிவினர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு கட்டாக்காலி நாய்களுக்கு நஞ்சூட்டி அழித்தனர். (ஒ-173)


மொடேன் கல்வி நிலையம் நெல்லியடி.
A/L 2006
கலை, வர்த்தக
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
05.04.2004 திங்கள
இ.நாகரிகம்: 8.30 a.m. (புநே.)
கணக்கீடு : 4.30 p.m.
O/L DAY CLASS
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
05.04.2004 திங்கள்
கனிதம் – சந்திரன் (உடுப்பிட்டி)
விஞ்ஞானம் – நிறைஞ்சன் (உடுப்பிட்டி)
சமூகம் – பவதாரன் (உடுப்பிட்டி)
காலை 7.30 - 10.30 வரை (பு.நே.)
குறிப்பு: அனுபவம் மிக்க ஆசிரியர் குழுவினால் கற்பிக்கப்படும். (30248)



நிறஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், விக்ரம், தேவயானி நடித்த
விண்ணுக்கும் மண்ணுக்கும்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புநே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இக்கு
The Italian Job



ராஜா யாழ்ப்பாணம்
வசீகரன், பூஜா நடித்த

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
பட்டப்பின் படிப்புகள் பீடம்.
பண்பாட்டியல் முதுகலைமாணி - 2002/2003
இரண்டாம் அரையாண்டுத் தேர்வு - 2003

மேற்படி பாட்சை 15.04.2004 (வியாழக்கிழமை) ஆரம்பமாகும். பாட்சைக்கான அனுமதி அட்டை, நேரசூசியை பீடாதிபதி அலுவலகம், உயர்பட்டப்படிப்புகள் பீடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இக்கற்கைநெறிக்கான ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி 14.05.2004 ஆகும்.

பதிவாளர்.
02.04.2004.
(சி-34060)


திரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்
A/L-2006
பௌதிகவியல்
பொறியியல்
By: M. கருணாநிதி
சனி 5 மணி
03.04.2004 (சனி)



BRIGHTMAN
நாவலர் வீதி, யாழ்.நகர்.
புதிய பிரிவு A/L 2006 கலைப் பிரிவு
தமிழ் : N.பாலா
அளவையியல் : P.கமல்
இ. நாகரிகம் : பத்மராஜா
புவியியல் : I.S.ஜெகன்
ஆரம்பம்: 04.04.2004 Sun. 8.00 a.m.


# மரண அறிவித்தல்கள்

## கிருஷ்ணர் பொன்னையா

நீதிமன்ற வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் பொன்னையா 02.04.2004இல் மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரிபூரணம் அவர்களின் அன்புக் கணவரும் அன்ரன், ஜெயா, டொறின் (சுவிஸ்), பற்றீசியா (கனடா), அலோசியஸ் (சுவிஸ்) ஆகியோர்களின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (03.04.2004) சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் குளமங்கால் புனித சவேரியார் சேமக்காலையில் நலலடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*நீதிமன்ற வீதி,*
*மல்லாகம்.* (30427)(38-16-18)

தகவல்:
மகன் - அன்ரன், ஜெயா.

## தர்மலிங்கம் சந்திரமோகன்

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சந்திரமோகன் 01.04.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - சரஸ்வதி தம்பதியினரின் மருமகனும் ஸ்ரீபவானியின் அன்புக் கணவரும் அனோஜினி, ரகுவரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16/13, சீனியர் லேன்,*
*கலட்டி,*
*யாழ்ப்பாணம்.* (30428)(38-16-18)

தகவல்:
ச.ஸ்ரீபவானி
(மனைவி).

## திருமதி இரத்தினம் பாலசிங்கம்
### (ஓய்வுபெற்ற ஆசிரியை)

நல்லூர், வெயில்உகந்த பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் அவிசாவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் பாலசிங்கம் அவர்கள் 02.04.2004 அன்று அவிசாவளையில் காலமானார்.

அன்னார் நா.பாலசிங்கம் (**Rtd.factory officer Duwarampitiya Estate, Getahetta**) அவர்களின் அன்பு மனைவியும் நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி வேலுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திரு.திருமதி நாகமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான திருமதி தங்கம்மா நல்லையா, திருமதி நேசமணி வீரகத்தி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அவிசாவளையை வசிப்பிடமாகக்கொண்ட ராதிகா (அதிபர்-ஹெட்டஹெட்ட தமிழ் வித்தியாலயம்), பரமேஸ்வரி (முன்னாள் ஆசிரியை - அல்-அக்ஸ்சா முஸ்லிம் வித்தியாலயம் அஹலியகொட), குகனேஸ்வரன் (ஆசிரியர், வடுவஹ தமிழ் கனிஷ்ட வித்தியாலயம், தும்மோதற), குகேஸ்வரி (ஆசிரியை - தல்துவ முஸ்லிம் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் S.T.ரவிந்திரநாதன் கருணா, (உரிமையாளர் விமனு ஸ்ரோஸ் அவிசாவளை, பிராந்திய முகவர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), ராதாகிருஷ்ணன் (உரிமையாளா - நியூ கிரவுண் ஸ்ரோர்ஸ் அவிசாவளை), மேனகா (ஆசிரியை - சாந்தமரியாள் கல்லூரி அவிசாவளை), ஜோர்ஜ் பிறவுண் (உரிமையாளர் - உதயம்ஸ் சைவ உணவகம், அவிஸாவளை) ஆகியோரின் அன்பு மாமியாரும் லாவண்யா, விமல்காந் காருண்ஜா, விமனுயா, பார்த்தபன், ராகுலன, கோகுலன், பிரணவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாளை (04.04.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரின் அவிசாவளை இல்லத்திலிருந்து பர்ணபாஸ் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*S.T.ரவீந்திரநாதன்,*
*47/2, அறலியா மாவத்தை,*
*அவிசாவளை.*
T.P. :036-222 2172 (30425)(16-18)

தகவல்:
சை.குணநாயகம்
56, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 4590837.

## திருமதி பரமேஸ்வரி இராஜேந்திரா



நல்லூர், இல.67, செட்டித்தெருவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பரமேஸ்வரி இராஜேந்திரா நேற்று (02.04.2004) வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - தையல்நாயகி தம்பதிகளின் பாசமிகு மகளும் இராஜேந்திராவின் (**Retired Registrar, Colombo, Batticaloa University**) அன்பு மனைவியும் சகுந்தலா (**Canada**), நளாயினி (சந்திரா-**U.K.**) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவராமா (**Engineer, Canada**), ஆனந்தன் (**Engineer, U.K.**) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கலைவாணி (**Canada**), சங்கீதா (**U.K.**) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பாகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***38, PARK SIDE CRESCENT,***
***SURB ITONISURREY,***
***U.K.***
**T.P.: 0044 2083992017**

தகவல்:
இராஜேந்திரா
(கணவர்).
(30425)(38-16-18)


நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
விஜய், சிம்ரன், விவேக்,
தலைவாசல் விஜய் மற்றும் பலர் நடித்த
A.R.ரஹ்மானின் இசையில்....
உதயா

தினசரிகாட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (புதிய நேரம்.)
(C-34180)


Jayoda ஜயோதா

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7120004 முதல் 7130347 வரை
சீட்டிழுப்பு இல. 20 திகதி 01-04-2004

வெற்றி எண்கள்: 7 1 1 0 6 6 — சுப்பர் எண் 24

சுப்பர் ஜக்பொட் பரிசு 16,772,375/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 16,772,375/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/- | 450,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 91 | 5,000/- | 455,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 885 | 500/- | 442,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 8,860 | 50/- | 443,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 87,810 | 10/- | 878,100/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 08 | 5,000/- | 40,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 90 | 1,000/- | 90,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 891 | 100/- | 89,100/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 8,778 | 20/- | 175,560/- |
| மொத்தம் | 107,423 | | 4,063,260/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 4,063,260/-

இந்த திங்கட்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. 17,018,750/-

தொடர் இல. 6157504 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஏப்ரல் 05 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

7125008-5-58
7123177-9-29
7126282-0-84
7122796-4-39
7121706-2-82

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# இம்முறை மிகக் கூடுதலானோர் வெகு சுறுசுறுப்பாக வாக்களிப்பு

## ஆங்காங்கே சிறுசிறு சம்பவங்களுடன் அமைதியான தேர்தல் வாக்களிக்கக் கிடைத்ததில் புலிகள் பகுதி மக்கள் மட்டற்ற மகிழ்ச்சி

முன்னைய பல தேர்தல்களில் போல அல்லாமல் இம்முறை வாக்காளர்கள் மிகக் கூடுதலான எண்ணிக்கையில் வாக்களிப்பு நிலையங்களுக்கு நேரகாலத்தோடு சென்று வாக்களிப்பில் சுறுசுறுப்பாக ஈடுபட்டார்கள். ஆங்காங்கே சிறுசிறு சம்பவங்கள் சில இடம்பெற்ற போதிலும் வாக்களிப்பு மிக அமைதியாக நடந்தது.

நாடுமுழுவதிலுமிருந்து கிடைத்த தகவல்களின்படி நேற்று மதியத்துக்கு முதலே வாக்காளர்களில் பெரும் பகுதியினர் வாக்களித்துவிட்டனர்.

நேற்று வெள்ளிக்கிழமையாகையால் குறிப்பாக முஸ்லிம் பகுதிகளில் ஜும்மா தொழுகைக்குச் செல்ல முன்னர் வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு விரைந்துசென்று வாக்களித்தார்கள்.

இதற்கு முந்திய காலங்களில் போல வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்காக வாக்காளர்கள் வரிசைகளில் நீண்டநேரம் காத்து நின்றதைக் காணமுடியவில்லை. வரிசைகளே இல்லை என்று சொல்லுமளவுக்கு வாக்களிப்பு தாமதமின்றி மளமளவென்று நடந்தது.

வன்செயல்கள், சட்டமீறல் சம்பவங்கள், பயமுறுத்தல், தேர்தல் மோசடி, ஆள் மாறாட்டம் முதலான சம்பவங்கள் ஒரு சில இடங்களில் மட்டும் சிறிதளவில் நடந்துள்ளன.

ஆனால், திகாமடுல்ல மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராகத் தேர்தல் மோசடிகளும், வன்முறைகளும் படுமோசமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டன என்று மேற்படி கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸன் அலியும் பிரதித் தலைவர் பாரூக் மஜீத்தும் தேர்தல் ஆணையாளருக்கும், தேர்தலுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபருக்கும், தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் புகார் செய்துள்ளனர்.

# திருமலை, மட்டக்களப்பிலும் தமிழ்க் கூட்டமைப்பு முன்னணி

திருகோணமலை,மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இன்று அதிகாலைவரை கிடைத்த உத்தியோக பூர்வமற்ற தகவல்களின்படி தமிழரசுக்கட்சி முன்னிலையில் இருக்கின்றது.

மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தின் கல்குடா, பட்டிருப்பு, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் தொகுதிகளில் தமிழரசுக் கட்சி முன்னணியில் உள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

தமிழரசுக்கட்சிக்கு 4 ஆசனங்கள் வரை கிடைக்கும் சாத்தியங்கள் உண்டு என சுட்டிக்காட்டப்பட்டது.

திருகோணமலை தேர்தல் தொகுதியில் மூதூர், திருமலை, தேர்தல் தொகுதிகளில் தமிழரசுக்கட்சி முன்னணியில் உள்ளது. அம்மாவட்டத்தின் சேருவில தொகுதியில் ஐ.ம.சு. கூட்டணி முன்னணியில் உள்ளது. இந்த மாவட்டத்தில் தமிழரசுக் கட்சிக்கு 2 ஆசனங்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ம-4)

# வாக்களிப்புக் குறித்து ஆனந்தசங்கரி சீற்றம்!

லண்டன்,ஏப்.3

யாழ் குடாநாட்டில் தேர்தல் முறையாக நடைபெறவில்லை.

- இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் சுயேச்சைக்குழு I இன் சார்பில் போட்டியிட்ட முதன்மை வேட்பாளர் வீ.ஆனந்தசங்கரி.

நேற்று பி.பி.ஸியின் தமிழோசைக்கு அளித்த செவ்வியிலேயே அவர் தேர்தல் பற்றி சீற்றமுடன் கருத்து வெளியிட்டார்.

அப்பேட்டியில் ஆனந்தசங்கரி மேலும் கூறியதாவது:-

எமது வேட்பாளர்களுக்கு பல விதத்திலும் நெருக்கடிகள் கொடுக்கப்பட்டன. கள்ள வாக்குகளைத் தடுப்பதற்காக ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் சார்பில் இரண்டு முகவர்களை நியமிப்பதற்கு உரிமை இருந்தது. எனினும், எமது வேட்பாளர்களால் அவ்வாறு செய்ய முடியவில்லை.

வாக்களிக்கும் நிலையங்களுக்கு மாறிமாறி ஏற்றிச் செல்லப்பட்ட நபர்களால் கள்ள வாக்குகள் இடப்பட்டன. குறிப்பாக, முகமாலைப் பகுதியில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் திருவிழாவே இடம்பெற்றது. சாப்பாடு, களியாட்டம் என்று மாறி மாறி இடம்பெற்றன. கள்ள வாக்குகள் என்று தெரிந்தும் அங்கிருந்த அதிகாரிகள் அதனைப் பொருட்படுத்தாது அவர்களை வாக்களிக்க அனுமதித்தனர்.

இது தொடர்பாகத் தேர்தல் ஆணையாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். இத்தேர்தலை ஏற்கமுடியாது என்றும கூறியுள்ளேன். - இப்படி ஆனந்தசங்கரி தெரிவித்தார். (ஐ-9)

## நாடுமுழுவதும் அமைதி

# வாக்களிப்பின் பின்னர் ஊரடங்கு இல்லை

நாடு முழுவதும் இம்முறை மிகவும் அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்று முடிந்திருப்பதால் வழமைபோன்று வாக்களிப்பு முடிவடைந்தபின்னர் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்படவில்லை.

வன்முறைகளற்ற வகையில் தேர்தல் பூர்த்தியடைந்திருப்பதால் நாட்டில் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா நேற்றுமாலை தெரிவித்தார். எனினும், நேற்று வாக்களிப்பு முடிவடைந்த கையோடு நாடு முழுவதும் பாதுகாப்பு உஷார்ப்படுத்தப்பட்டது.

யாழ்.குடாநாட்டில் ஊரடங்கு அமுல் செய்யப்படலாம் என்று எதிர்பார்த்து நேற்று மாலை மக்கள் வீடுகளுக்குள் முடங்கினர். பின்னர் முன்னிரவு வரை வீதிகளில் சனநடமாட்டம் காணப்பட்டது. பிரதான வீதிகள் எங்கும் இராணுவத்தினர் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். யாழ். நகரிலும் நகருக்கு வெளியிலும் உள்ள சில அரசியல்கட்சிகளின் அலுவலகங்களின் பாதுகாப்பும் நேறிறிரவு முதல் அதிகரிக்கப்பட்டிருந்தது.

(ஐ-4-3-8-9-10-5-11-173-70)

# வன்னிப் பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகர்த்தியிருந்தனர்.

வாக்களிப்புப் பகுதியில் படையினர் எவரும் காணப்படவில்லை. பொலீஸாரே எல்லா இடங்களிலும் பணியில் இருந்தனர். படையினரின் சோதனை நிலையப் பகுதியில் மட்டும் சில இராணுவப் பொலீஸார் பணியில் இருந்தனர்.

"கடந்த 83ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட கால இருபத்தொரு வருட காலத்தில் இப்போதுதான் எமக்கு வாக்களிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. யுத்தம் நிறுத்தப்பட்டு அமைதிச் சூழலும் நிலையான சுதந்திரமும் கிடைக்க எமது வாக்கைப் பயன்படுத்தினோம்; வழங்கினோம். இத்தனை வருடங்களுக்குப் பின்னர் நாம் அளித்த வாக்கு எமது மக்களின் வாழ்க்கையில் சுபீட்சத்தை ஏற்படுத்தும் என்றே நம்புகிறோம்"- என்று வாக்களிக்க வந்த வயோதிபர்கள், பெண்கள், ஆண்கள் எனப் பலர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

"வன்னியில் இன்னல்கள் அனுபவித்த மக்கள் தமக்குத் தீர்வைத் தரக்கூடிய தலைவர்களைத் தெரிவு செய்ய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதை அவர்கள் நல்ல முறையில் பயன்படுத்த இங்கு வந்துள்ளனர்"- என்று கிளிநொச்சியைச் சேர்ந்த மதகுரு ஒருவர் கருத்து வெளியிட்டார்.

ஓமந்தையில் அமைக்கப்பட்டிருந்த கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்காகப் பெரும் எண்ணிக்கையான வாக்காளர்கள் நேற்றுமுன்தினம் இரவே புளியங்குளம் பகுதிக்கு வந்து கூடிவிட்டனர்.

ஓமந்தை சோதனைச்சாவடிக்கு அருகில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் காலை முதல் மக்கள் முண்டியடித்துக்கொண்டு வாக்களித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாககளிக்கத் தகுதி பெற்றவர்களில் 70 சத வீதமானோர் வாக்களித்துள்ளதாக வன்னித் தேர்தல் தொகுதியின் தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவித்தார். (ஐ-3-4-8-7-ரி)

# தபால் மூல வாக்களிப்பு மாவட்ட ரீதியாக முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.3

நேற்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் தபால்மூல வாக்களிப்பு முடிவுகள் நேற்றிரவு 9 மணி முதல் வெளிவரத்தொடங்கின.

முற்கொண்டு கிடைத்த முடிவுகள் வருமாறு :-

**இரத்தினபுரி மாவட்டம்**

★ ஐ.ம.சு.கூ - 4,886
★ ஐ.தே.மு - 2,839
★ ஹெல உறுமய - 502
★ புதிய இடதுசாரி.மு - 14

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

★ ஐ.ம.சு.கூ - 5,669
★ ஐ.தே.மு. - 2,743
★ பூமி புத்ர - 16
★ புதிய இடதுசாரி மு. - 07

**மொனறாகலை மாவட்டம்**

★ ஐ.ம.சு.கூ. - 4,667
★ ஐ.தே.மு. - 2,521
★ ஹெல உறுமய - 178

**பதுளை மாவட்டம்**

★ ஐ.ம.சு.கூ. - 9,025
★ ஐ.தே.மு. - 5,523
★ ஹெல உறுமய - 654
★ தே.அ.முன்னணி - 10
★ புதிய இடதுசாரி மு. - 06

**யாழ்ப்பாண மாவட்டம்**

★ தமிழரசுக்கட்சி - 3,175
★ ஈ.பி.டி.பி. - 420
★ சுயேச்சை 1 - 340
★ இடதுசாரி முன்னணி - 07
★ சோசலிஸக் கட்சி - 01
★ முஸ்லிம் காங்கிரஸ - 01
★ ஹெல உறுமய - 01
★ சுவராஜ்ய - 01

**திருகோணமலை மாவட்டம்**

★ ஐ.ம.சு.கூ. - 3,362
★ தமிழரசுக்கட்சி - 1,892
★ ஐ.தே.மு. - 1,463
★ முஸ்லிம் காங்கிரஸ் - 1,450
★ ஹெல உறுமய - 88

**மாத்தறை மாவட்டம்**

★ ஐ.ம.சு.கூ. - 8,201
★ ஐ.தே.மு. - 3,665
★ ஹெல உறுமய - 788
★ தே.அ.முன்னணி - 09
★ சோசலிஸக் கட்சி - 06

**கேகாலை மாவட்டம்**

★ ஐ.ம.சு.கூ. - 8,894
★ ஐ.தே.மு. - 5,502
★ ஹெல உறுமய - 853
★ இடதுசாரி முன்னணி - 09
★ பூமிபுத்ர - 06

**வன்னி மாவட்டம்**

★ தமிழரசுக் ,கட்சி - 1,942
★ ஐ.ம.சு.கூ. - 1,132
★ ஐ.தே.மு. - 799
★ புளொட் - 104
★ ஈ.பி.டி.பி. - 52

**மாத்தளை மாவட்டம்**

★ ஐ.ம.சு.கூ. - 5,093
★ ஐ.தே.மு. - 3,014
★ ஹெல உறுமய - 512
★ சோசலிஸக் கட்சி - 05
★ தே.ம.கட்சி - 04

**புத்தளம் மாவட்டம்**

★ ஐ.ம.சு.கூ. - 3,564
★ ஐ.தே.மு. - 2,559
★ ஹெல உறுமய - 440
★ தே.அ.முன்னணி - 05
★ இடதுசாரி முன்னணி - 04

**பொலன்நறுவை மாவட்டம்**

★ ஐ.ம.சு.கூ. - 3,851
★ ஐ.தே.மு. - 2,200
★ ஹெல உறுமய - 108
★ சோசலிஸக் கட்சி - 03
★ தே.அ.முன்னணி - 02

**அநுராதபும் மாவட்டம்**

★ ஐ.ம.சு.கூ. - 12,536
★ ஐ.தே.மு. - 7,387
★ ஹெல உறுமய - 664
★ சோசலிஸக் கட்சி - 26
★ தே.அ.முன்னணி - 17

**திகாமடுல்ல மாவட்டம்**

★ ஐ.ம.சு.கூ. - 5,520
★ ஐ.தே.மு. - 2,238
★ முஸ்லிம் காங்கிரஸ் - 1,429
★ தமிழரசுக் கட்சி - 763
★ ஹெல உறுமய - 101
★ ஈ.பி.டி.பி. - 05

**நுவரெலியா மாவட்டம்**

★ ஐ.ம.சு.கூ. - 3,423
★ ஐ.தே.முன்னணி - 3,150
★ மலையக மக்கள் மு.- 239
★ ஹெல உறுமய - 219
★ ஜனநாயகக் கூட்டமைப்பு - 57

**கொழும்பு மாவட்டம்**

★ ஐ.ம.சு.கூ. - 8,482
★ ஐ.தே.முன்னணி - 4,641
★ ஹெல உறுமய - 3,260
★ இடதுசாரி முன்னணி - 30
★ தே.அ.முன்னணி - [illegible]5

**களுத்துறை மாவட்டம்**

★ ஐ.ம.சு.கூ. - 8,102
★ ஐ.தே.முன்னணி - 4,097
★ ஹெல உறுமய - 1,410
★ இடதுசாரி முன்னணி - 13
★ சுயேச்சைக்குழு 7 - 04

**மட்டக்களப்புத் தொகுதி**

★ தமிழரசுக்கட்சி - 3,312
★ ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் - 623
★ ஐ.ம.சு.கூ. - 547
★ ஐ.தே.க. - 91
★ புளொட் - 86
★ ஈ.பி.டி.பி. - 68

# 8 தொகுதி முடிவுகள் வெளியாகின

கொழும்பு, ஏப்.3

தெற்கில் இன்று அதிகாலை வெளியான எட்டுத் தொகுதிகளின் முடிவுகளின்படி ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பும் 5 தொகுதிகளில் வெற்றிபெற்றிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி 3 தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்தது. (ம-3)

# யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட தொகுதி ரீதியான முடிவுகள்

யாழ். மாவட்டத்தில் இன்று காலை வரை கிடைத்த முடிவுகள் இவை. எனினும், உத்தியோகபூர்வமாக இந்த விவரங்கள் வெளியிடப்படவில்லை.

**பருத்தித்துறை**

★ தமிழரசுக் கட்சி - 22,400
★ ஈ.பி.டி.பி. - 676
★ சுயேச்சை1 - 248
★ சோசலிச முன்னணி - 22
★ இடதுசாரி முன்னணி - 9
★ சுயேச்சை 2 - 6
★ ஹெல உறுமய - 5
★ றுகுணு கட்சி - 3
★ முஸ்லிம் காங்கிரஸ் - 2
★ சுவராஜ்ய - 1

**கோப்பாய்**

★ தமிழரசுக் கட்சி - 26,805
★ ஈ.பி.டி.பி. - 2,108
★ சுயேச்சை 1 - 453
★ இடதுசாரி முன்னணி - 36
★ சோசலிச முன்னணி - 32
★ முஸ்லிம் காங்கிரஸ் - 16
★ சுயேச்சை 2 - 15
★ ஹெல உறுமய - 12
★ றுகுணு கட்சி - 9
★ சுவராஜ்ய - 9

**உடுப்பிட்டி**

★ தமிழரசுக் கட்சி - 24,172
★ ஈ.பி.டி.பி. - 874
★ சுயேச்சை 1 - 362
★ சோசலிச முன்னணி - 25
★ இடதுசாரி முன்னணி - 23
★ சுயேச்சை 2 - 15
★ முஸ்லிம் காங்கிரஸ் - 13
★ ஹெல உறுமய - 12
★ சுவராஜ்ய - 6
★ றுகுணு கட்சி - 5

**காங்கேசன்துறை**

★ தமிழரசுக் கட்சி - 18,499
★ ஈ.பி.டி.பி. - 2,395
★ சுயேச்சை 1 - 405
★ சோசலிசக் கட்சி - 27
★ இடதுசாரி முன்னணி - 25
★ சுயேச்சை 2 - 8
★ சுவராஜ்ய - 8
★ றுகுணு கட்சி - 7
★ முஸ்லிம் காங்கிரஸ் - 7
★ ஹெல உறுமய - [illegible]

**நல்லூர்**

★ தமிழரசுக் கட்சி - 22,321
★ ஈ.பி.டி.பி. - 2,431
★ சுயேச்சை 1 - 800
★ இடதுசாரி முன்னணி - 50
★ சோசலிச முன்னணி - 32
★ முஸ்லிம் காங்கிரஸ் - 14
★ சுயேச்சை 2 - 14
★ றுகுணு கட்சி - 7
★ சுவராஜ்ய - 5

**மானிப்பாய்**

★ தமிழரசுக் கட்சி - 23779
★ ஈ.பி.டி.பி. - 3239
★ சுயேச்சை 1 - 980
★ இடதுசாரி முன்னணி - 54
★ சோசலிச முன்னணி - 36
★ சுயேச்சை 2. - 22
★ ஹெல உறுமய் - 20
★ முஸ்லிம் காங்கிரஸ் - 11
★ சுயராஜ்ய - 11
★ றுகுணு கட்சி - 6

**ஊர்காவற்றுறை**

★ தமிழரசுக் கட்சி - 13911
★ ஈ.பி.டி.பி. - 1406
★ சுயேச்சை - 51
★ முஸ்லிம் காங்கிரஸ் - 41
★ சோசலிசக் கட்சி - 11
★ இடது சாரி முன்னணி - 11
★ சுயேச்சை 2 - 8
★ றுகுணு கட்சி - 5
★ ஹெல உறுமய - 4
★ சுவராஜ்ய - 3

**வட்டுக்கோட்டை**

★ தமிழரசுக் கட்சி - 24,240
★ ஈ.பி.டி.பி. - 1513
★ சுயேச்சை 1 - 485
★ சோசலிச முன்னணி - 42
★ இடதுசாரி முன்னணி - 32
★ சுயேச்சை 2 - 15
★ ஹெல உறுமய - 9
★ முஸ்லிம் காங்கிரஸ்எ - 9
★ சுவராஜ்ய - 7
★ றுகுணு கட்சி - 6

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.